விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை (05.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO


SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# விட்டுக் கொடுப்பை மேற்கொள்ள கூட்டமைப்புத் தயாராக வேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள்

(சென்னை)

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றைய கால மாற்றத்தைக் கட்டாயம் உணர்ந்து சில விட்டுக் கொடுப்புக்களுக்குத் தயாராக வேண்டும் என்று இரு நாள்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்ற ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சென்னையில் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்துள்ளார். (20 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக் கிரிக்கெட் சபையினால் பதுளையில் உள்ளகக் கிரிக்கெட் ஆட்ட பயிற்சியரங்கு ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ் அரங்கை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். அதனைத் திறந்து வைத்த பின் ஜனாதிபதி துடுப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.

## இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களை முன்னைய பாடசாலைக்கே செல்லப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளமையினால் மாற்றம் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ஆசிரியர்கள் நாளை முதல் தமது முன்னைய பாடசாலைகளிலேயே கடமையாற்ற வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் உரிய ஆசிரியர்களுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

எனினும் இவ் அறிவித்தல் கிடைக்கப்பெறாத ஆசிரியர்கள் தாம் பணிபுரிந்த பாடசாலைகளிலேயே மறு அறிவித்தல் வரை கடமையைத் தொடருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## இலங்கைக்கு இன்று வரும் இந்தியத் தளபதி யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்வார்

(கொழும்பு)

இலங்கைக்கு ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்யும் இந்திய இராணுவத்தளபதி வி.கே சிங் யாழ்ப்பாணம் உட்பட்ட வடக்கு- கிழக்கு பிரதேசங்களுக்கு விஜயம் செய்வார் என தெரிவிக்கப்படுகிறது. இலங்கை இந்திய பாதுகாப்புத் திட்டத்தை உறுதிசெய்துகொள்ளும் முகமாகவும் இலங்கையில் சீனா ஆதிக்கத்தை தடுக்கவும் இந்தியா அண்மைக்காலமாக தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இதில் ஒரு கட்டமாகவே இந்திய இராணுவத் தளபதியின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது.

இந்த விஜயத்தின்போது இந்திய இராணுவத் தளபதி இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்புப் பரிமாற்றங்கள் குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்துவார். அத்துடன் வடக்கு- கிழக்கின் இராணுவ முகாம்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இதில் முக்கியமாக (20 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிப் பிரசாரம்

### ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அரசமைப்பு திருத்த சட்ட மூலத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிப் பிரசாரத்தில் ஈடுபட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் இக் கைது இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. ஒன்றாகப் போராடுவோம், அரசமைப்புத் திருத்தத்தை எதிர்ப்போம் என்கின்ற தலைப்புகளிலான சுவரொட்டிகளை பஸ் நிலையப் பகுதியில் இவர்கள் ஒட்டிக் கொண்டிருந்தபோதே யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொலிஸார் கைது செய்திருக்கின்றார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஜே.வி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான லலித் (வயது-29) (20 ஆம் பக்கம் பார்க்க)

පවුල් බලය තර කරන
ව්‍යවස්ථා සංශෝධනය
හකුළා ගනු!
ජනතා විමුක්ති පෙරමුණ

## உண்ணாவிரதத்தில் ஈடுபட ஐ.தே.கட்சி திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமொன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி அரசாங்கத்தினால் 18 ஆம் அரசியலமைப்பு திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் குறித்த நாளில் நாடாளுமன்றக் கட்டடத்தில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் சிங்கள இணையமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்கும் பாதையில் ஐக்கியதேசியக் (20 ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

SLMO

# மக்களின் கருத்துக்களை அறியாமல் அரசியல் யாப்பில் மாற்றங்கள்!

## ஊடக அமைப்புக்கள் கூட்டறிக்கை

அவசரகாலச் சட்டமூலமாகக் கொண்டுவரப்படும் 18ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு ஊடக அமைப்புக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஊடக அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் இந்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

த அலையன்ஸ்ஒவ் மீடியா எனப்படும் ஊடக கூட்டமைப்பு மக்களின் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தையும் சகலவிதமான ஜனநாயக முறைமைகளையும் மீறி அரசியல் யாப்புக்கான 18வது திருத்தம் என்ற பெயரில் அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

மக்கள் மத்தியில் கலந்துரையாடலை மேற்கொண்டு திருத்தங்கள் பற்றி கருத்தொருமைப்பாடு கண்ட பின்னரே அரசியல் யாப்பில் திருத்தங்கள் செய்வது ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறையாகும். ஆகையால் அதி முக்கியமான கொள்கையை மீறி ஒரு அவசரகாலசட்டமூலமாக அரசியல் யாப்பிற்கு திருத்தங்கள் கொண்டு வருவது அபாயகரமான போக்காகும் என்று ஊடக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாடு எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க புதிய அரசியல் யாப்பு தேவைப்படுமிடத்தில் ஒரு தனிப்பட்டவர் மீது அதிகாரங்களை குவிக்கும் திருத்தங்களைக் கொண்டு வருவது ஒரு சிறு குழு சகல அதிகாரங்களையும் தன்னகத்தே வைத்திருப்பதை கட்டுப்படுத்தும் நடைமுறையை சீர்குலைத்து மேற்படி அபாயகரமான நிலையை மேலும் மோசமடையவே செய்யும்.

இந்த திருத்தங்களுக்கான யோசனைகளை மிக உன்னிப்பாக கவனத்தில் எடுத்து அவை ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் அரசாங்க சேவையின் சுதந்திரத்திற்கும் இழைக்கக் கூடிய தீங்குகளை யதார்த்தமாக மதிப்பிட வேண்டும் என்றும் மேற்படி அமைப்பு மக்களிடம் வலியுறுத்தியுள்ளது.

மக்களது இணக்கப்பாடின்றி கொண்டுவரப்படும் ஜனநாயகத்திற்கு புறம்பான யோசனைகளுக்கு எதிராக மக்கள் அணி திரள வேண்டும் என்றும் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், சுதந்திர ஊடக இயக்கம், தெற்காசிய சுதந்தர ஊடக சங்கம், முஸ்லிம் ஊடக மன்றம், இலங்கை தமிழ் ஊடகங்கள் கூட்டமைப்பு, ஒடுக்குமுறைக்கு எதிரான ஊடகவியலாளர்கள் சங்கம், ஊடக ஊழியர்கள் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியன கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன. (ச-5)


**COMPUTER REPAIRING**

சகலவிதமான கணனிகளும்(Laptop/Desktop) உங்கள் வீடுகளுக்கோ, அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாட்களில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
T.P- 0212224459, 0774192275

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 021-222 4459, 0774192275,
Fax : 021-222 4460.

**Certificate in Internet & E-Mail**

Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Face Book, Video Call, Net Call என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

*8 STUDENTS IN A BATCH*

பாடசாலை மாணவர்களுக்கு, தொழில் புரிபவர்களுக்கென விஷேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

DURATION 2 WEEKS, RS. 1000/-
(கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)



**STR TRAVELS**

யாழ் – கொழும்பு பஸ் சேவைகள்

அராலி, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சண்டிலிப்பாய், மானிப்பாய், ஆனைக் கோட்டை, திருநெல்வேலி ஊடாக யாழில் இருந்து கொழும்பிற்கு புறப்படும்.

**VACANCY :-** Sales Rep, Sales Helper, Accounts Clerk, Driver.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திருமண அழைப்பிதழ்கள், Offset Printer, மற்றும் Foodcity க்குரிய உரிய Fittings and furniture விற்பனைக்குண்டு.

**STR MULTI CENTER**
No.45A, ஆடியபாதம் வீதி
திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
Tel :- 021-4921921, 0777570150


# கிளிநொச்சி கிராமப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கிராமப்புறங்களில் தற்போது திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது. கடந்தவாரம் அக்கராயன், ஸ்கந்தபுரம் போன்ற பகுதிகளில் ஒரு இரவில் 9 வீடுகளில் பொருட்கள் திருட்டுப் போயுள்ளன.

கிராமப்புறங்களில் பொலிஸாரின் செயற்பாடுகள் இன்னமும் முழுமை பெறவில்லை. இதனால் அதிகரித்து வரும் திருட்டுப் போன்ற செயல்பாடுகளுக்கு காரணமானவர்கள் தொடர்பில் எவ்வித நடவடிக் கைகளையும் மேற்கொள்ளமுடியாதுள்ளது என மக்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

அக்கராயன், ஸ்கந்தபுரம் போன்ற பகுதிகளில் கடந்த வாரம் ஒரு இரவில் 9 வீடுகளில் பொருட்கள் திருட்டுப் போயுள்ளன. முற்றுமுழுதாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இந்தப்பகுதியுள்ளது.

மேலும் மாலை ஆறுமணிக்கு மேல் இப்பகுதியில் நடமாடுபவர்களே இராணுவத்தினரால் விசாரிக்கப்படுவர். இந்நிலையில் இத்திருட்டுச்சம்பவங்கள் இடம்பெறுவது அப்பகுதி மக்களுக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவு ஸ்கந்தபுரம் பகுதியிலுள்ள வீடொன்றில் திருட முற்பட்டபோது வீட்டு உரிமையாளர் கூக்குரல் இட்டுள்ளார்.

இதனை அடுத்து வீட்டிலிருந்து சிலர் ஓடியுள்ளனர். அவர்களை துரத்திச் சென்றபோது அவர்கள் அப்பகுதிலுள்ள காவலரண் ஒன்றிற்கு அருகாமை ஓடிச்சென்றதாகவும் இது போன்ற சம்பவங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாக நடைபெற்று வருகின்றன என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(ச-5)

# இடைத்தங்கல் முகாமிலுள்ளோருக்கு ஆசி வழங்கினார் ஆதீனகுரு முதல்வர்

(கொழும்பு)

மீள் குடியேற்றத்திற்கென அழைத்து வரப்பட்ட இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள சாந்தபுரம் கிராம மக்களை நல்லை ஆதீனகுரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சென்று பார்வையிட்டுள்ளதுடன் ஆசீர்வாதங்களையும் வழங்கியுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் அழைப்பின்பேரில் கடந்த வியாழனன்று குறித்த இடைத்தங்கல் முகாமிற்கு குருமுதல்வர் சென்றிருந்தார்.

இதன்போது மக்கள் கண்ணீர் மல்க தமது இடங்களில் தம்மை மீள் குடியேற்றம் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். மேலும் தமது நிலை தொடர்பாக வெளியுலகிற்குத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொண்டனர்.

இங்கு உரையாற்றிய குரு முதல்வர் எல்லாம் நல்லவையாக அமையும். மனிதர்கள் செய்கின்ற செயல்கள் எல்லாவற்றிற்குமே ஓர் பிரதியீடு உண்டு. ஆகவே எல்லோரும் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் உடனிருந்தார். (ச-5)

# பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்சங்கத்தின் அவசரப் பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை, நிர்வாகப் பதவியிலிருந்து விலகுதல் போன்ற விடயம் குறித்து விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்துப் பீட ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதன் தலைவர் பேராசிரியர் செ. இளங்குமரன் அறிவித்துள்ளார். (ச-5)


**VACANCYES**

❁ MEDICAL OFFICER/MBBS/RMO (FULLTIME)
❁ TRAINEE PHARMACIST
❁ TRAINEE MLT

APPLY TO,
MEDICAL DIRECTOR
CENTRAL NURSING HOME (PVT) LTD
350 , PALALY ROAD,JAFFNA.
TEL.PHONE 0212222263

(C-1008)



**USED LAPTOPS FOR SALE**




Processor 2.4, 2.8, 2.4 Dual Core, 1.8 Core 2 Duo, DVD Writer, 250GB HDD,1GB Ram, Card Reader Modem, Network, with Bag. from Rs. 32,000.

**Original Night Vision 5.00 Mega Pixeles Web Camera Rs. 900/- with warranty.**

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 021-222 4459, 0774192275, Fax : 021-222 4460.



**காணி விற்பனைக்கு**

சாஸ்திரியார் வீதியில் வீடும் கிணறும் அடங்கிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

T.P.No: 0212226179, 0212226180

(2407)





**NALIN INFORMATION TECHNOLOGIES Pvt Ltd**



நல்லூர் பெருந்திருவிழா நிறைவை முன்னிட்டு கொழும்பு விலையிலும் மிகமிக மலிவான விலையில் கணனிகள் விற்பனை செய்யப்படுகின்றது.

| | PROCESSOR | MOTHER BOARD | RAM | HDD | DVD | CASE/KEY/MOU | MONITOR | PRICE |
|---|---|---|---|---|---|---|---|---|
| SYSTEM 1 | 2.7 Dual Core | INTEL G31 CHIP | 1GB KING (800) | 320GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 46600 /- |
| SYSTEM 2 | 2.7 Dual Core | INTEL G31 CHIP | 2GB KING (800) | 500GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 49750 /- |
| SYSTEM 3 | 2.8 Dual Core | INTEL G31 CHIP | 1GB KING (800) | 320GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 47000 /- |
| SYSTEM 4 | 2.8 Dual Core | INTEL G31 CHIP | 2GB KING (800) | 320GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 50750 /- |
| SYSTEM 5 | 2.93 Core 2 Dou | INTEL G31 CHIP | 2GB KING (800) | 500GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 57500 /- |
| SYSTEM 6 | 1.66 A.M | INTEL G41 CHIP | 2GB KING (800) | 320 GB SAM | SAM | POWER.LOGIC | 19LG/ 19 ACER | 37800/- |

கணனிகளுக்கு 3 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன், கொள்வனவு செய்பவர்களுக்கு Free UPS, Speaker, Head Phone வழங்கப்படும்.

**SPECIAL OFFER PRICE ▶**
HEAD PHONE - 250/- - 2000/-
KEY BOARD - 350/- - 3500/-
MOUSE - 250/- - 3800/-
COMPUTER TABLE & CHAIR - 4900/-
HSDPA HUAWEI 7.2 MBPS MODEM - 5950/-
CANNON LIDE 100 SCANNER - 6100/-
PRINTER HP DESKJET D1660 - 4500/-



**HP LASERJET P1102 PRINTER - 16250/- ( FREE i POD)**

இச்சலுகைகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது

**PRO 2000 MT BUSINESS PC** களை பெற்றுக்கொள்ள முடியும்
Pro - 2.70GHz Dual Core, HDD - 320 GB, Ram - 2GB DDR 3, Monitor - 19" HP
Rs - 67,000/-

NALIN information Technologies Pvt Ltd

195/4, PARAMESWARA JUNCTION, TP: 021 2221166, 0777667974



**செல்லா சினிமா**




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

## இளைஞர்,யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி நெறிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராப் பிரிவின் பயிற்றுனர் பயிற்சி நெறிக்கு 18 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்த அல்லது இவ்வாண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறியில் மின் உபகரணம் திருத்தம் , கையடக்கத் தொலைபேசி திருத்தம், மோட்டார் சைக்கிள் திருத்தம், வெளி இணைப்பு இயந்திரத் திருத்தம் ஆகியவற்றில் பொருத்தமான ஒரு பயிற்சி நெறியினைத் தெரிவு செய்து அதற்கான விண்ணப் பத்தில் முழுப்பெயர், கல்வித் தகைமை, க.பொ.த (சாதரண தரம்) பெறுபேறு , க.பொ.த (உயர்தரம்) பெறுபேறு , முகவரி , தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி என்பவற்றை உள்ளடக்கிய சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை வடமராட்சி கல்வி அலுவலகத்தில் முறைசாராப் பிரிவிற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2-19)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 22 ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை எஸ்.கணபதிப்பிள்ளை (பாட்டு), எஸ்.கோபிதாஸ் (வயலின்), எம்.சிதம்பரநாதன் (மிருதங்கம்), செல்வன் என்.மாதவன்(கடம்), என்.சதீஸ்குமார் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

✠✠✠

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் மஹோற்சவ காலத்தில் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" எனும் விடயம் பற்றி செல்வி கதிரவேலு சிவயோகராணி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து சீரணி நாகம்மாள் சிவசாயி சித்திர கோட்ட மற்றும் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

✠✠✠

நல்லூர் கந்தன் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன குரு மூர்த்த மண்டபத்தில் நடைபெற்றுவரும் "வில்லிபாரதம்" என்னும் தெய்வீகத்தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு 'அர்ச்சுனன் தபசு'' என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

(ஸ்ரீ-7)

## காக்கைதீவில் கூட்டெரு தயாரிக்கும் தொழிற்சாலை

(கொழும்புதுறை)

காக்கைதீவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கூட்டெரு தயாரிக்கும் தொழிற்சாலை பணிகள் தற்பொழுது மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2005ஆம் ஆண்டு னெராட் நிறுவன நிதி உதவியுடன் மாநகரசபைக்கு சொந்தமான காணியில் இக் கூட்டெரு தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்ட போதிலும் பின்னர் இப்பகுதி உயர்பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்டிருந்ததால் சேதனக் கழிவுகளின் மீள் சுழற்சி செயல்முறை தடைப்பட்டிருந்தது.

இந்நிலையில் புனர் நிர்மானத்திற்கான முன்மொழிவு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசர செயல்திட்டத்தின் கீழ் தற்போது அங்கீகரிக்கப்பட்டு பூரண நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் யாழ். மாவட்டத்திற்கு கிடைக்கின்ற வாழைத்தண்டுகள் மற்றும் குப்பை கழிவுகள் என்பனவற்றை தண்ணீர் விட்டு உக்க வைத்து அதனை உரமாக்குவதைக் காணமுடிகிறது.

மேலும் மேற்படி திட்டத்தின் மூலம் கூட்டெரு பசளைகள் உள்ளூர் விவசாயிகளுக்கு மிகவும் பயன்பெறும் என்றும் கூறப்படுகின்றது.

(ஸ்ரீ-7-51)

## இராசி பலன்

05-09-2010
(ஆவணி 20, ஞாயிற்றுக்கிழமை)
துவாதசி முன்னிரவு 11.42 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 7.56 மணிவரை
இராகுகாலம் 1.35- 6.05 மணிவரை
சுபநேரம் 4.05-10.35 மணிவரை
மூன்றாவது ஆவணி ஞாயிறு

**மேடம்** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், தாய் வழி அனுகூலமுண்டு, தொலைபேசித் தகவல் ஆச்சர்யப்பட வைக்கும்.

**இடபம்** இறை வழிபாட்டால் இன்பங்களைக் காண வேண்டிய நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், தொழில் முயற்சி வெற்றி பெறும், மனதில் உற்சாகம் அதிகரிக்கும், சுபகாரியப் பேச்சுக்கள் மனநிம்மதி தரும்.

**கடகம்** குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற நண்பர்கள் உறுதுனை புரிவர், கோவில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**சிங்கம்** காரிய வெற்றிக்கு கதிரவனை வழிபட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் தித்திக்கும் செய்தியொன்று வந்து சேரலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், வெளி வட்டார பழக்க வழக்கங்கள் விரிவடையும்.

**கன்னி** பொன்னான நாள்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், பொன், பொருள் வாங்க அத்திவாரமிடுவீர்கள், மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**துலாம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்,கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும், செல்வநிலை உயர சிவனை வழிபட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** ஆனைமுகன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உதவும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**தனுசு** சூரிய வழிபாட்டால் சுகத்தினைக் காண வேண்டிய நாள்,பிரியமான சிலரிடம் யோசித்து பேசும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தாரின் யோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

**மகரம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள், வரங்கள் வந்து வாயிற் கதவைத் தட்டும், பழைய சம்பிரதாயங்களில் நம்பிக்கை வைப்பீர்கள்.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெற தும்பிக்கை யானை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளால் பெருமைகள் உருவாகும், பண வரவு இருமடங்காகும், இடம், பூமி வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வருமானம் அதிகரிக்கும் நாள், பிள்ளைகள் வழியில் சில செலவுகள் ஏற்படலாம்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### ஓட்டமும் நடையும்

"உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்!"

"எதற்கு"

"ஒவ்வொரு வருடமும் ஓட்டப்பந்தயத்தில் நீங்கள் தான்முதல் ஆளாக வருகிறீர்கள். பரிசும் வாங்குகிறீர்கள்."

"நன்றி"

"அது எப்படி, உங்களால் மட்டும் முடியுது?"

"பயிற்சி தான் காரணம். அதுதான் எனக்குப் பரிசு வாங்கவும் உதவுகிறது. உடம்பை நன்றாக வைத்துக் கொள்ளவும் உதவுகிறது."

"எனக்குப் பரிசு வாங்கவேண்டும் என்ற ஆசையில்லை. ஆனால் உடம்பை நன்றாக வைத்துகொள்ள வேண்டும் என்ற ஆசையுண்டு."

''அப்படியானால் அதற்கு சுலபமான வழி உண்டு. சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். நடந்து போகக்கூடிய இடங்களுக்கெல்லாம். நடந்தே செல்லுங்கள். வாகனங்களைத் தேடாதீர்கள். உங்களால் முடிந்த வேலைகள் எதுவாக இருந்தாலும் அதை நீங்களே செய்து முடியுங்கள். அடுத்தவர்களைத் தேடிக் கொண்டிருக்காதீர்கள். ஸ்டேன் போர்ட் பல்கலைக்கழககமும் ஹவார்ட் பல்கலைக்கழமும் இணைந்து ஓர் ஆய்வு நடத்தினார்களாம். அதில் அவர்கள் கண்டுபிடித்தது என்ன தெரியுமா? உட்கார்ந்து வேலை செய்பவர்களை விட ஓடி ஆடி வேலை செய்பவர்கள் நீண்டகாலம் வாழ்கிறார்களாம்."

"அப்படியானால் இனிமேல் நானும், உங்கள் அளவுக்கு இல்லையென்றாலும் ஓராளவாவது உடம்பை நன்றாக வைத்திருப்பதற்கு ஏதாவது செய்ய வேண்டியது தான்." "என்னை மாதிரியே நீங்களும் ஆகலாம். அது ஒன்றும் கஷ்டமில்லை."

"அதற்கு என்ன செய்யவேண்டும்?"

"தினமும் நடக்க வேண்டும். ஓடவேண்டும். உடற்பயிற்சி செய்ய வேண்டும்."

"உங்களைப் போலவே நடக்கலாம். உடற்பயிற்சி செய்யலாம். ஆனால், உங்களை மாதிரி அவ்வளவு விரைவாக ஓட முடியாது சேர்".

"ஏன் முடியாது? என்னை விட விரைவாக உங்களால் ஓட முடியும்."

"அதற்கு நான் என்ன செய்யவேண்டும்"

''என்னைப் போலவே பலபேரிடம் கடன் வாங்கிவிட வேண்டும்.'

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 70 |
| கோவா | 70 | 80 |
| கரட் | 60 | 100 |
| பூசணி | 40 | 50 |
| புடோல் | 35 | 50 |
| வாழைக்காய் | 50 | 70 |
| சின்ன வெங்காயம் | 55 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 60 |
| கரணைக்கிழங்கு | 80 | 80 |
| பயிற்றங்காய் | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 |
| பீற்றூட் | 25 | 50 |
| கறிமிளகாய் | 60 | 70 |
| முருங்கைக்காய் | 100 | 100 |
| போஞ்சி | 120 | 140 |
| கத்தரி தம்புள்ள | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 |



சமூகசேவைகள் சமூக நலத்துறை அமைச்சின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் ஊடாக நடாத்தப்பட்ட தொழிற்பயிற்சிப் பிரிவின் கண்காட்சி ஆனைக்கோட்டை தொழிற்பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூகசேவை அமைச்சின் தொழிற்பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் என்.கோணேஸ்வரனை சமூகசேவை அமைச்சின் தொழிற்பயிற்சிப் பிரிவின் அபிவிருத்தி உதவியாளர் மாலை அணிவித்து வரவேற்பதையும் கண்காட்சியைத் திறந்துவைப்பதையும் அருகில் கௌரவ விருந்தினர் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் நிற்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் போதனாசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# 10 அறநெறிப் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள், தளபாடங்கள் கையளிப்பு

(பூநகரி)

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்து கலாசார திணைக்களத்தினால் இயக்கப்பட்டு வருகின்ற 10 அறநெறிப் பாடசாலைகளுக்கு 7 1/2 இலட்சம் ரூபா செலவில் கற்றல் , கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மூன்தினம் முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலர் ஏ.எஸ். வசந்தகுமார் தலைமையில் பூநகரிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலக உதவித் திட்டமிடற் பணிப்பாளர் இ.சொக்கநாதன் கலந்து கொண்டு அறநெறிப் பாடசாலை நிர்வாகிகளிடம் மேற்படி உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வழங்கினார்.

இப்பொருட்கள் பள்ளிக்குடா முருகன் ஆலய, மட்டுவில் நாடு சிவபாலபிட்டி சித்தி விநாயகர் , செட்டியாகுறிச்சி திகிரி விநாயகர் , ஆலங்கேணி கட்டுக்கன்ரைப் பிள்ளையார் , முழங்காவில் வெங்கடேஸ்வரர், முழங்காவில் பிள்ளையார் கோவில் , கரியாலை நாகபடுவான் ஞானவைரவர், கிராஞ்சி கற்பகப் பிள்ளையார் , ஜெயபுரம் வரசித்தி விநாயகர் மற்றும் வேரவில் வெள்ளிபாதத்து வீரகத்தி விநாயகர் ஆகிய அறநெறிப் பாடசாலைகளுக்கே வழங்கப்பட்டன.

(ஸ்ரீ-2-7)

# பிரித்தானிய இந்து ஆலயத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் எவருக்கும் பாதிப்பில்லை

பிரித்தானியாவின் லெசிஸ்டர் ஹரே கிருஷ்ணா இந்து ஆலயத்தில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை என தீயணைப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

பண்டிகைக்காக உணவு தயாரிக்கப்பட்ட வேளையில் எரிவாயு சிலிண்டர் வெடித்து இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

தீ விபத்து இடம்பெறுவதற்கு சில நொடிகளுக்கு முன்னர் விடுவிக்கப்பட்ட முன் எச்சரிக்கையினால் 30 பேரின் உயிர் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தினால் கட்டடத்திற்கு பாரியளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உணவு சமைக்கப் பயன்படுத்தப்பட்ட எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவினால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எரிவாயு சிலிண்டரிலிருந்து வாயு கசிவதனை அவதானித்த நபர் விடுத்த எச்சரிக்கையினால் பலரின் உயிர் பாதுகாக்கப்பட்டதாக தீயணைப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

அருகிலிருந்தவர்கள் 30 செக்கனுக்குள் வெளியேறியதாகவும் இதனால் பாரிய இழப்பு தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த விபத்தில் எவருக்கும் காயங்களோ அல்லது உயிரிழப்புக்களோ ஏற்படவில்லை என்பது மிகப் பெரிய அதிசயம் என தீயணைப்புப் படையின் பிரதான கட்டளை அதிகாரி பில்ஸ்மித் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரசுக்கு ஆதரவளிக்கும் எம்.பி.க்களை கட்சியிலிருந்து நீக்க ஐ.தே.க. தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து விலக்குவதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்துல் காதர், ஏர்ல் குணசேகர, லக்ஸ்மன் செனவிரட்ன மற்றும் மனுஷநாணயக்கார ஆகியோர் அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்புக்கு ஆதரவு தெரிவிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் ஏற்கனவே பொதுத் தேர்தலின் போது இவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட சத்திய கடதாசிகளின் அடிப்படையில் கட்சியிலிருந்து விலக்கி விடுவது என ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு முடிவெடுத்துள்ளது.

இதேவேளை அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்புக்கு எதிர்ப்பு வெளியிடும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப்படக்கூடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகாவின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் இராணுவ நீதிமன்ற விசாரணைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதனால் இராணுவ நீதிமன்ற விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இராணுவ நீதிமன்ற விசாரணைகளில் கலந்துகொள்ளும் அளவிற்கு பொன்சேகா உடற் தகுதியுடன் காணப்படவில்லை என உயர் இராணுவ அதிகாரியொருவர் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

இராணுவ மருத்துவர்கள் சரத் பொன்சேகாவை பரிசோதனை செய்துள்ளதாகவும் அவரது உடல் நிலை பாதிக்கப்படடுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் 9மற் றும் 10 ஆம் திகதிகளில் விசாரணை கள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



சரத் பொன்சேகாவின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதனால் கடந்த 30 ஆம் திகதி முதல் இராணுவ நீதிமன்ற விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பேருந்து - சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில்

(உடுப்பிட்டி)

மந்திகைச் சந்திக்கருகாமையில் , துவிச்சக்கரவண்டி ஒன்றும் யாழ்ப்பாணத்திற்கான சுற்றுலாப் பயணத்தை முடித்துவிட்டு வந்த தென்னிலங்கை பேருந்து ஒன்றும் மோதியதில் துவிச்சக்கரவண்டியில் வந்தவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவமானது நேற்றுக் காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

இதில் புலோலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஆனந்தன் (வயது- 50) என்பவரே இடுப்பு எலும்பு விலகிய நிலையில் மந்திகை வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தெற்கில் இருந்து வரும் வாகனங்களின் அதிகரிப்புக் காரணமாக தற்போது யாழ்.நகரில் விபத்துக்களும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கிளிநொச்சியில் இராணுவத்தின் படைத்தலைமையகம் திறந்துவைப்பு

வடக்கில் நிரந்தர இராணுவ முகாம்களை அமைக்கும் அரசாங்க வேலைத் திட்டத்தின் கீழ், கிளிநொச்சி நகரத்தில் அமைக்கப்பட்ட இராணுவத்தின் 551 ஆவது படைத் தலைமையகம் நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தலைமையில் இந்த முகாம் திறந்து வைக்கப்பட்டது.

சீன அரசாங்கத்தின் உதவியுடன் இந்த முகாம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர சிவில் ஒருங்கிணைப்பு அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பனவும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-7)


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்: -

கடந்த 26.08.2010 வியாழக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

**ஸ்ரீமதி சத்தியபாமா அம்மா சோமசுந்தரக்குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் கிரியைகள் முருகமூர்த்தி வீதி, சங்கானையிலுள்ள அவரது இல்லத்தில் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

| | | |
|---|---|---|
| தசாகம் | -04.09.2010 | -சனிக்கிழமை காலை 10.00 மணி |
| ஏகோதிஷ்டம் மாசியம் | -05.09.2010 | - ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி |
| சபிண்டீகரணம் | -06.09.2010 | - திங்கட்கிழமை காலை 10.00 மணி |
| கிருஹயக்ஞம் | -07.09.2010 | - செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி 07.09.2010 அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

இங்ஙனம்
கணவர்: சிவஸ்ரீ.சிவ.சோமசுந்தரக்குருக்கள்
பிள்ளைகள்:-
சிவஸ்ரீ.சோ. பாலச்சந்திரக்குருக்கள் (கொழும்பு),
ஸ்ரீமதி.ஜெயலக்ஷ்மி அம்மா கருணாகரசர்மா,
ஸ்ரீமதி.நந்தினிதேவி கெங்காதரக்குருக்கள் (லண்டன்),
பிரம்மஸ்ரீ.சோ.கேதீஸ்வரசர்மா,

முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

(2409)

## போலி ஆவணங்கள் மூலம் அரச காணிகள் துஷ்பிரயோகம்

தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு சபைகளின் பெயரில் போலியான முறையில் உறுதிப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு சொந்தமான பல ஏக்கர் காணிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பிலான விசார்ணைகளை புலனாய்வு பிரிவு மேற்கொண்டு வருகின்றது.

புலனாய்வு பிரிவின் தகவல்படி போலியான முறையில் உறுதிப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட காணிகள் பல புத்தளம் மற்றும் குளியாப்பிட்டிய பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய போலி உறுதிப்பத்திரங்களை சட்டத்தரணி ஒருவர் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு சபைக்கு அனுப்பிய போதே இந்நடவடிக்கை வெளிச்சத்திற்கு வந்தது.

அரச காணிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது குறித்து பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு அண்மையில் கவனம் செலுத்தியுள்ளது. அரச காணிகளைப் பிழையான வழியில் பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# யுத்தம், வன்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கு 4 வீத வட்டிக்கு வீடமைப்பு,சுயதொழில் கடன்கள்

# அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு உட்பட நாடு முழுவதும் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நிலைமை காரணமாகவும் பயங்கரவாத வன்செயல்கள் காரணமாகவும் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதை பிரதான நோக்காகக் கொண்டு நான்கு வீத வட்டிக்கு வீடமைப்பு, சுயதொழில் கடன் திட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை புனர்வாழ்வு அதிகார சபையும் இலங்கை வங்கியும் இணைந்து இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளன.

10 வருடங்களில் திரும்பிச் செலுத்தும் விதத்தில் 4 வீதம் ஆகக் குறைந்த வட்டியில் ஒரு வருட கடன் நிவாரண திட்டத்தின் கீழ் வீடமைப்புக்கு 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளது. சுயதொழில் முயற்சிகளுக்கென இதே வட்டி வீதத்தில் ஒரு வருட கடன் நிவாரணத்தில் மூன்று வருடத்தில் திருப்பிச் செலுத்தும் வகையில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனாக வழக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கடன் வழங்கும் நடவடிக்கைகளை இலங்கை வங்கி தமது கிளை அலுவலகங்கள் ஊடாக ஆரம்பிக்கிறது.

குறிப்பாக யுத்தத்தினால் அழிவுற்ற வடக்கு- கிழக்கு பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் வவுனியாவில் இலங்கை வங்கி தனியான அலுவலகமொன்றை திறக்கவுள்ளது. அடுத்த வாரம் இந்த அலுவலகம் திறக்கப்படவுள்ளதுடன் புனர்வாழ்வு அதிகார சபையின் அலுவலர்களும் இங்கு கடமையாற்றவுள்ளனர்.

கடன் பெற தகுதியுடையவர் பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுத் தேவையான தகவல்களை நிரப்பிய பின்னர் கிராமசேவகரிடம் கையளிக்க வேண்டும். கிராம சேவகர் பிரதேச செயலாளரின் சான்றுடன் புனர்வாழ்வு அதிகார சபையிடமும் அதன் பின்னர் இலங்கை வங்கியிடமும் படிவமானது இறுதி முடிவுக்காக அனுப்பப்படும்.

யுத்த நிலைமைகள் காரணமாக பாதிப்படைந்த பெற்ற கடனை மீளச் செலுத்த முடியுமான குடும்பங்களுக்காக வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியும்.

சுயதொழில் கடன் திட்டத்தின் கீழ் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்த குடும்பங்கள் மற்றும் யுத்த நிலைமைகள் காரணமாக குடும்பத்தின் வருமானம் உழைப்பவர் இறந்து காணாமல் போனவரின், ஊனமுற்ற நிலைமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட குடும்பங்கள் அல்லது விதவையாக்கப்பட்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுயதொழில் ஆரம்பிப்பதற்கும் கடன் வழங்கப்படவுள்ளது.

விவசாய கைத்தொழில், மின்பிடித் தொழில், கால்நடை வளர்த்தல், வீட்டுடன் தொடர்புடைய பொருட்கள் தொடர்பான சுயதொழில், சிறிய அளவிலான வியாபார நடவடிக்கை மற்றும் வேறு சுயதொழில் முயற்சிக்கும் இந்த நிவாரணக் கடன் வழங்கப்படும்.

தகுதி பெற்ற கடன் விண்ணப்பதாரர்களை தெரிவு செய்யும் முறை பிரதேச செயலாளர்களின் நடுநிலைமையுடன் புனர்வாழ்வு அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

இது எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதோடு அது தொடர்பாக சகல மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர் மற்றும் இலங்கை வங்கி கிளை முகாமையாளர்களை அறிவுறுத்துவதற்கான உரிய சுற்றறிக்கை அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு அதிகார சபை மற்றும் இலங்கை வங்கியின் அதிகாரிகள் அடுத்த வாரம் வடபகுதியில் கிராமப்புறங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர். கிராமப்புற மக்களுக்கு இக்கடன் திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்களும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

## பிரபாகரனின் வீடியோ காட்சிகளை பார்வையிட்ட 4 இளைஞர்கள் கைது

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பான வீடியோ காட்சிகளை பார்வையிட்ட நான்கு இளைஞர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தளாய் , ஊறணி பிள்ளையார் பிரதேசத்தில் புலிகளின் தலைவர் தொடர்பான வீடியோ காட்சிகளைப் பார்வையிட்ட போதே இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போர் நடைபெற்ற காலத்தில் இவர்கள் புலிகளுடன் இணைந்து செயற்பட்டனரா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த வீடியோக் காட்சிகளை வழங்கிய நபரையும் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## 24 இலங்கைக் குடும்பங்களுக்கு சுவிஸில் பிரஜாவுரிமை!

சுவிற்ஸ்லாந்தில் இவ்வரும் 24 இலங்கை குடும்பங்களுக்கு பிரஜாவுரிமை கிடைத்துள்ளது. இப் பிரஜாவுரிமைக்கு 435 வெளிநாட்டுக் குடும்பங்கள் விண்ணப்பித்திருந்தன.

இவற்றில் செர்வியாவைச் சேர்ந்த 115 குடும்பங்களுக்கும் பொஸ்னியா,ஹேர்ஸ்கோவினா, மசிடோனியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 43 குடும்பங்களுக்கும் துருக்கியைச் சேர்ந்த 35 குடும்பங்களுக்கும் கொசொவோவைச் சேர்ந்த 37 குடும்பங்களுக்கும் இத்தாலியைச் சேர்ந்த 29 குடும்பங்களுக்கும் Croatia வைச் சேர்ந்த 28 குடும்பங்களுக்கும் ஜெர்மனியைச் சேர்ந்த 27 குடும்பங்களுக்கும் இலங்கையைச் சேர்ந்த 24 குடும்பங்களுக்கும் போர்த்துக்கல்லைச் சேர்ந்த 06 குடும்பங்களுக்கும் ஸ்பெயினைச் சேர்ந்த 04 குடும்பங்களுக்கும் ஈராக், நெதர்லாந்து, ரஷ்யா, திபெத் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா மூன்று குடும்பங்களுக்கும் ஏனைய நாடுகளில் இருந்து ஒட்டு மொத்தமாக 32 குடும்பங்களுக்கும் இப்பிரஜாவுரிமை கிடைத்துள்ளது. (ஸ்ரீ-2)


union assurance
Trust in your tomorrow, today.

## உடனடி வேலை வாய்ப்பு

**ஆசியாவில் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முழுமையான பக்கபலத்துடன் இயங்கும் இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான**

**UNION ASSURANCE PLC**

**அதன் சாவகச்சேரி கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு, தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்படவுள்ளது.**

❖ பதவி வெற்றிடங்கள்

1. FINANCIAL ADVISORS
2. PERSONAL FINANCIAL ADVISORS
3. SENIOR PERSONAL FINANCIAL ADVISORS
4. PERSONAL FINANCIAL MANAGERS
5. SENIOR PERSONAL FINANCIAL MANAGERS

❖ தகைமை

⇨ G.C.E. O/L with Maths

⇨ காப்புறுதி தொழிலில் முன் அனுபவம் விரும்பத்தக்கது. (முக்கியம் அல்ல)

⇨ சர்வதேச தரத்திலான பயிற்சிகள் வழங்கப்படும்.

⇨ கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவு

⇨ தென்மராட்சி , கிளிநொச்சி பகுதியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

❖ நேர்முகத் தேர்வு

காலம் :-06.09.2010 (திங்கட்கிழமை)
07.09.2010 (செவ்வாய்க்கிழமை)
நேரம் :- 9.30 AM
இடம் :- லிகோரியார் தேவாலயம், கச்சாய் வீதி, சாவகச்சேரி.

T.P.No :- 0777727721 / 0770253533

(2227)


## மரண அறிவித்தல்

## திருமதி குணரத்தினம் சந்திராதேவி



சரசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரத்தினம் சந்திராதேவி நேற்று முன்தினம் (03.09.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் குணரத்தினத்தின் (C.T.B) அன்பு மனைவியும் றசிதா, விஜிதா, குமரதாஸ், குகன்தாஸ், கிருஸ்ணதாஸ், ஜெகதாஸ், மோகனதாஸ் ஆகியோரின் பாசமிகு அன்புத் தாயாரும் பரஞ்சோதி(சோதி), பிறேமானந்தம், சசிகலா, கலாவதி, சிந்து ஆகியோரின் அன்புமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.09.2010) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மோகனதாஸ்(மகன்)
தொ.பே.எண் 0773549847


(C-1006)

# வட்டுக்கோட்டை தீர்மானம் எடுத்த தந்தை செல்வாவின் மறுவடிவமா கே.பி.?

## தமிழீழத்தைக் கைவிட அவர் யார்?

## தொடரும் வைகோவின் யுத்தம்

கே.பி. வெளியிட்ட கருத்துக்களின் யுத்தம் இப்போதைக்கு ஓயாது போல! "போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு



புலிகளே சம்மதித்த போது, தமிழகத்தில் இருக்கும் வைகோவும் பழ.நெடுமாறனும் தடையாக இருந்தார்கள்" என்று தனது முதல் பேட்டியில் குறிப்பிட்ட குமரன் பத்மநாதன் அடுத்தடுத்துக் கொடுத்து வரும் பேட்டிகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றியும் அதன் தலைவர் பிரபாகரன் பற்றியுமே வார்த்தை விமர்சனங்களைப் பாய்ச்ச ஆரம்பித்திருப்பது, தமிழீழ ஆதரவாளர்களுக்குப் பெரும் அதிர்ச்சி! கே.பி.யின் புதிய குற்றச்சாட்டுகளுக்கு வைகோவின் பதில் என்ன எனக் கேட்டோம்.

**தமிழீழம் என்பது அழிந்துபோன இலட்சியம் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறாரே கே.பி?"**

"இதைச் சொல்ல கே.பி-க்கு அதிகாரம் கொடுத்தது யார்? இரத்தத்தாலும் கண்ணீராலும் எழுதப்படும் தமிழ் ஈழ மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் துரோகப் படலமும் தொடர்ந்தே வந்திருக்கிறது. இதில் இன்றைய அத்தியாயம் கே.பி. இலங்கை அரசின் கைக் கூலியாகத் தமிழினத்துக்கு துரோகம் செய்வதையே இன்றைய தொழிலாகக் கொண்டு மாறிவிட்ட கே.பி.யிடம் இந்த வார்த்தைகளைத் தானே எதிர்பார்க்க முடியும்?

தமிழீழம் வேண்டும், வேண்டாம் என்று முடிபெடுக்க பல பத்து ஆண்டுகளுக்கு முன்னால் வட்டுக்கோட்டையில் தீர்மானம் போட்ட ஈழத்தந்தை செல்வநாயகத்தின் மறுவடிவமா இவர்? எத்தனை நாட்டு இராணுவம் சூழ்ந்து வந்தாலும் தமிழீழ இலட் சியத்தை விடாமல் களத்தில் நின்று போராடிய புலிப் போராளியா? 2002 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டில் ஊடகத் தொடர்பாளராக அறி விக்கப் பட்டார். இப்போது விடுதலைப் புலிகள் அமைப்புக்கு நானே தலைவர் என்றும் பிரபாகரன் தன்னை அப்பொறுப்பு வகிக்கச் சொன்னார் என்றும் முழுப் பொய்யைச் சொல்லி தனக்குத்தானே முடி சூட்டிக்கொண்டவர் தான் இந்த கே.பி.!

அப்படிப்பட்டவர் பேசும் பேச்சா இது?

2008 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தின உரையில் தலைவர் பிரபாகரன், "பெரிய ஆயுத பலம் கொண்ட பாரிய சக்திகளை எதிர்த்து நாங்கள் நிற்கிறோம். எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்கொண்டாலும் தமிழரின் சுதந்திர விடிவுக்காகத் தொடர்ந்து நாம் போராடுவோம். சத்திய இலட்சியத்தீயில் தம்மையே அழித்துச் சரித்திரம் ஆகிவிட்ட எமது மாவீரர்களின் வழியே சென்று நாம் எமது இலட் சியத்தை அடைவோம் என்று உறுதி எடுத்துக் கொள்வோமாக! புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!" என்று அறிவித்தார்.

உலகத்தின் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தமிழர் உள்ளமெல்லாம் இருக்கும் ஒரே தீர்வு.... தனித் தமிழ் ஈழம் தான். கடந்த 40 ஆண்டுகாலமாக ஒவ்வொரு நாளும் தமிழனைக் கொன்ற ஒன்றுபட்ட இலங்கைக்குள் இனி தமிழனுக்கு நிம்மதி என்பது வரவே வராது. இதை நாம் சொல்லவில்லை... அமெரிக்க மருத்துவர் எலின் ஷான்டர் சொன்னார். "இனி இரண்டு தமிழர்கள் சந்திக்கும்போது அடுத்த ஆண்டு தமிழீழத்தில் சந்திப்போம் என்று உறுதி எடுங்கள்" என்றார் அவர். எலின் ஷான்டர் உடம்பில் கூட தமிழ் இரத்தத்துக்கான துடிப்பும் தவிப்பும் ஓடுகிறது. கே.பி. உயிர் வாழ்வதோ சிங்கள இரத்தத்தில்!"

**"விடுதலைப் புலிகள் சாதாரண மக்கள் மீது வன்முறையைத் தூண்டி துன்பம் விளைவித்ததாக கே.பி.சொல்கிறாரே?"**

"இது மட்டுமா சொல்கிறார் அவர்? கோலாலம்பூரில் இலங்கை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு விமானத்தில் வசதியுள்ள உயர் வகுப்பில் தான் பயணித்ததாகவும், கொழும்பு சென்றவுடன் ராஜபக்ஷவின் சகோதரன் கோத்தபாய வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அங்கு அவர் கேக்கும் தேநீரும் தந்து உபசரித்ததாகவும், மிக அன்போடு தன்னிடம் பேசியதாகவும், அதன் பின் தான் ஒரு வீட்டில் தங்க வைக்கப்பட்டதாகவும், அதிகாரி ஒருவர் தனக்கு எந்நேரமும் உதவியதாகவும், உலகில் யாருடனும் பேசும் தொலைபேசி வசதியும் தொடர்பு கொள்ள மின் அஞ்சல் வசதியும் செய்யப்பட்டு உள்ளதாகவும் கே.பி. கூறியிருக்கிறார். சிங்கள அரசுக்கும், தனக்கும் பரஸ்பரப் புரிதலும் நம்பிக்கையும், நட்பும் வளர்ந்து கொண்டே வருவதாகவும் கூறியிருக்கிறார். நீண்ட காலத்துக்கு முன்பே யுத்தம் முடிந்து விட்டதாக கோத்தபாயவிடம் சொன்னதாகவும் கூறியிருக்கிறார்.

சிங்கள அரசால் சிங்காரித்து பூஜிக்கப்படும் கே.பி.,2009 மே 17 க்கு முன்னதாகவே யுத்தம் முடிந்துவிட்டதாகக் கூறிய கே.பி., விடுதலைப் புலிகளைப் பற்றியும், உயிர் கொடுத்துப் போராடிய போராளிகள் பற்றியும் எவருக்கும் நடுங்காத அதன் தலைவர் பற்றியும் உயர்வாகப் பேசுவார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

புலிகள், எப்போதேனும் அப்பாவி சிங்கள மக்களை தேடிப்பிடித்துக் கொன்றதுண்டா? பாலியல் துன்பம் இழைத்ததுண்டா? அவர்கள் வாழும் இடத்தில் குண்டு போட்டதுண்டா? அதற்கு என்ன ஆதாரம் வைத்திருக்கிறார் கே.பி? ஆனால் அப்பாவித் தமிழ் மக்களை சிங்கள இராணுவம் கொன்றதற்கு இலட்சக்கணக்கான ஆதாரங்கள் உண்டே? காட்டுக்குள் வழி தவறி வந்த சிங்களப் பெண் ஒருத்தியை தமிழர் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்தார் என்று கேள்விப்பட்டதும், அதற்கு மிகக் கடுமையான தண்டனை விதித்தவர் பிரபாகரன். புலிகளால் யுத்தத்தில் கொல்லப்பட்ட சிங்கள இராணுவ வீரர்களுக்கு அவர்கள் நாட்டு மரியாதையுடன் நல்லடக்கம் செய்தவர் பிரபாகரன். பிணைக் கைதியாகப் பிடித்துவைக்கப்பட்ட சிங்கள இளைஞன் ஒருவனது மனைவி அவனைப் பார்க்க வேண்டும் என்று



கோரிக்கை வைத்த போது உடனே அனுமதி கொடுத்தது புலிகள் இயக்கம். அப்படிப்பட்ட இயக்கத்தைத் தான் கே.பி கொச்சைப்படுத்துகிறார்.

எட்டு தமிழ் இளைஞர்களின் ஆடைகள் அப்புறப்படுத்தப்பட்டு அம்மணக் கோலத்தில் கண்கள் கட்டப்பட்டு கைகள் பின்புறமாக கட்டப்பட்டு இழுத்து வரப்பட்டு சிங்களச் சிப்பாய்கள் எட்டி உதைத்து மிதித்து மண்டியிட்டு உட்கார வைத்து எந்திரத் துப்பாக்கியால் பின்னந் தலையில் சுட்டு இரத்த வெள்ளத்தில் துடிதுடிக்கச் செய்து சாகடித்தார்களே...! இதை இணையத் தளங்களில் சனல் 4 தொலைக்காட்சியில் காண்பித்தார்களே. இதற்கு என்ன பதில் இருக் கிறது.?

சிங்களவன் வெறிகொண்டு திலீ



பனின் நினைவிடத்தை உடைத்தான். மாவீரர் துயிலும் இடங்கள் உடைக்கப்பட்டன. வாழ்க்கையின் வசந்த காலத்தில் சுகங்களைத் தேடாமல் மண்ணுக்காக மடிந்த எம் இளைஞர்களும் இளம் பெண்பிள்ளைகளும் கல்லறைக்குள் கூட நிம்மதியாய் கிடக்கக் கூடாது என்பதற்காக எல்லாக் கல்லறைகளையும் உடைத்தானே.... அதைப்பற்றி தனது பேட்டியில் ஒரு சொல் சொல்ல கே.பி.க்கு முதுகெலும்பு உண்டா? ஒபரேஷன் எல்லாளனில் பங்கேற்ற கரும்புலி வீரர்களின் உடலை நிர்வாணமாக்கி, சிங்களத் தெருவில் ஊர்வலம் விட்டதும், பெண் பேராளிகளை பாலியல் வல்லுறவு செய்து அந்தப் படங்களை வெளியில் விட்டதும் கே.பி.யின் கண்ணுக்கு காட்டுமிராண்டித்தனமாகத் தெரியவில்லையா?

**"இலங்கையின் அனைத்துத்தரப்பு மக்களிடமும் தான் மன்னிப்புக் கோருவதாக கே.பி. சொல்கிறாரே?"**

"எனக்கு உயிர்ப்பிச்சை தாருங்கள்" என்பதை வேறு வார்த்தையில் கேட்டிருக்கிறார் கே.பி.

ஜூனியர் விகடன்

# ஐ.தே.க.எம்.பி.க்களில் அதிகமானோர் அரசுக்கு ஆதரவாகவே வாக்களிப்பர்

## அமைச்சர் ஹெகலிய உறுதி



(கொழும்பு) அரசியலமைப்புத் திருத்தங்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டாலும் வாக்கெடுப்பின் போது அக்கட்சியின் அதிகமான உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே வாக்களிப்பார்கள் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு முடிவெடுத்துள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே கெஹெலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசியலமைப்பின் குறித்த திருத்தச் சட்டங்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் அன்றைய தினமே வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் ரம்புக்வெல இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் கொண்டுவரவுள்ள அரசியலமைப்புத் திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பின் போது எதிர்த்து வாக்களிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தெரிவித்துள்ளது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் எவ்வாறான முடிவை எடுத்தாலும் கட்சியின் செயற்குழு என்ன தீர்மானத்தை மேற்கொண்டாலும் அது குறித்து நாங்கள் அலட்டிக் கொள்ளமாட்டோம். காரணம் தனிக்கட்சி என்ற வகையில் அவர்களுக்கு தீர்மானம் எடுக்கும் உரிமை உள்ளது.

ஆனால், மனச்சாட்சி உள்ள மற்றும் நாட்டின் எதிர்கால நலனை விரும்புகிற ஐக்கிய தேசியகட கட்சி எம்.பி.கள் அரசியலமைப்புத் திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பின் போது நிச்சயம் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே வாக்களிப்பார்கள்.

எனவே திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பின் போது அதிகளவான ஐ.தே.க.எம்.பி.கள் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே வாக்களிப்பார்கள். அதில் எங்களுக்கு பாரிய நம்பிக்கை இருக்கிறது.

தற்போதைய நிலையிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நான்கு எம்.பி.கள் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்கத் தயாராகி விட்டனர். மேலும் அரசியலமைப்புத் திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பின் போது அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி.களுக்கு மக்களின் அங்கீகாரம் கிடைக்கும்.

இதேவேளை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவை நான் சந்தித்துப் பேச்சு நடத்தினேன். இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தோம்.

இந்தியா எமது நட்பு நாடாக இருக்கிறது. அதாவது அடுத்த வீட்டைப் போன்றது. எனவே சகல விடயங்கள் குறித்தும் இந்தியாவுடன் நாங்கள் ஒத்துழைப்புடன் செயற்படுவோம் என்றார்.இதேவேளை அரசாங்கத்தின் அரசியலமைப்பு திருத்த யோசனைகளை எதிர்ப்பதாக மக்கள் விடுதலை முன்னணியும் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அரசியலமைப்பில் முக்கிய மூன்று திருத்தங்களை 18 ஆவது திருத்தச் சட்டமாக கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு


(நல்லூர்)

அச்சுவேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புது வருட நிர்வாகிகள் தெரிவும் கடந்த 28 ஆம் திகதி அச்சுவேலி தெற்கு கிராமசேவையாளர் பிரிவு அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் தலைவராக எஸ். இரத்தினசிங்கம், உபதலைவராக எம்.ஞானலிங்கம், செயலாளராக எஸ்.பாலசுப்பிரமணியம், பொருளாளராக க.குகனேசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 13 பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஸ்ரீ-2-134)

# கொழும்பிலிருந்து மாத்தறைவரை நீண்டு செல்லும் தென்மாகாண அதிவேக வீதி



தென்மாகாண அதிவேக வீதியின் நிர்மாணப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ். 130.9 கிலோ மீற்றர் வீதி அமைக்கும் திட்டத்தில் ஒரு கட்டமாக 126 கிலோமீற்றர் நீளமான அதிவேக எக்ஸ்பிரஸ் வீதி அமைக்கப்படுகின்றது. இவ்வீதியானது கொழும்பிலிருந்து மாத்தறை வரை நீண்டு செல்கின்றது.

இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டு இவ்வீதி அமைக்கப்படுகிறது. வீதியில் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடையும் போது கொழும்பிலிருந்து மாத்தறைக்கான பயணத்தை மிக விரைவில் மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


எதிர்காலத்தில் இப்பிரதேசமான்து மக்கள் மத்தியில் பிரபலம் வாய்ந்த இடமாக காணப்படும் என நம்பப்படுகின்றது.

பல பாதுகாப்புகளை கொண்டு அமைக்கப்படும் இவ் வீதியின் நிர்மாணப்பணிகள் 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டில் அனைத்துப் பணிகளும் பூர்த்தியடைய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.இவ்வீதியின் நிர்மாணத்திற்கு சர்வதேச ஜப்பேன் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியன நிதி உதவிகளை வழங்கியுள்ளன.

நான்கு கட்டமாக அமைந்து காணப் படும் இவ்வீதியில் கொழும்பிலிருந்து மாத்த றைக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக் கூடியதாக இருப்பதோடு ஒன்றரை மணித்தியாலங்களில் பயணத்தை மேற்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.22 பாலங்கள் அமைந்து காணப்படும் இவ்வீதியில் தற்போதைக்கு 3 பாலங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று மாம்பழத் திருவிழா





படங்கள் -அரவிந்

## கல்லோ உன் மனது

நல்லை நகர்ப்பதியின் நாயகனாய் நடுவமர்ந்து
எல்லையில் கருணை ஏந்தி நிற்கும் வேலவனே
ஒல்லையில் நாடிவந்து உரைக்கின்றோம் உன்னிடத்தில்
தொல்லை பலகண்டோம் தோள்கொடுப்பார் யாருமில்லை
தில்லை அம்பலத்தான் திருமைந்தா கேட்டிடுவாய்
கல்லோதான் உன்மனது கரையாதா வைரமோ சொல் - இன்று

பத்மமுகுந்தன், புலோலி

## பேரழகில் பெயராத பிராணார் தாமே

கூரார்ந்த வேற்கை கொண்ட தென்னே
கோழி கொடியாக் கொண்ட தென்னே
சீரார்ந்த தேவர்பால் சேர்ந்த தென்னே
திருப்பரங் குன்றுகோயில் கொண்ட தென்னே
நீரார்ந்தசடை நிமலர் தந்த தென்னே
நெற்றிக்க ணிருந்து வந்த தென்னே
பேரார்ந்த நல்லூர்ப் பிராணான தென்னே
பேரழகில் பெயராத பிராணார் தாமே

சிவ.சண்முகவடிவேல் , ஏழாலை

## நல்லையம் பதியுறை வேலா!

கலைதவழ் நல்லையம் பதியுறை வேலா!
காதல் கொண்டு உனைத் தொழுதேத்துகிறேன்
மலைபோல் குவியும் பொன் பொருள் வேண்டாம்
மாட்சிமிக்க உன் அருள்போதும் எனக்கு
விலை நீளும் மாட மாளிகையோ நில
புலங்களோ வேண்டாம்
வீரத்துடன் திருக்கோலம் தரும்சுகம்
போதும் எனக்கு !
தொலைதூரம் விட்டிங்கு வந்து உனைத்
தொழும் பக்தருக்கு
தோன்றாத் துணையாய் நின்று அருள் தருவாய்!

எஸ்.நதி , நல்லூர்

## நலம் பெற வேண்டும் எமக்கருள் முருகா

நல்லைநகர் கோவில் கொண்ட நல்லூரானே
பொல்லாக் குறைகள் எல்லாம் போக்கிடுவாய்
சிங்கார வேலவனே சிறை மீட்க வந்தவனே
சிலையாக நின்றாலும் சிந்தையில் நிலையானவனே
கொடுமைகள் கொடூரங்கள் மலிந்த இவ்வுலகில்
சூரனை அழித்த உன்வேல் எங்கே வேல்முருகா
துடித்திடும் எம்மக்கள் துயர்துடைக்க வா முருகா
பொறுத்தது போதுமய்யா பொங்கி எழும் காலமய்யா!

ந.கௌரி ,அச்சுவேலி தெற்கு

வள்ளிதெய்வானையுடன் வரம் அருள்வாய் வடிவேலா!



சிவன் மோட்டோர் ஸ்ரோர்ஸ்
இல. 70/1 , மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவகுமரன் என்ரபிறைஸ்
Sivakumaran Enterprise
75,Stanley Road, Jaffna.



# கவிதைக் கலசம்

## இமயம் தொட...

சிறு உளிதான்
அழகிய சிலை செய்கிறது
சிறு துளிதான்
சமுத்திரமாகிறது
சிறு ஒளிதான்
நல்வழி காட்டுகிறது
உனக்கான வாழ்வு
உன்கையில் என்பதை
புரிந்து கொண்டால்
அதுதான் வாழ்க்கை

மாவை. நா.கஜேந்திரா

## சங்குநாதம்

என்னவளே...
எனக்குத் தெரியும்
நீ விரும்புவது
என்னையல்ல
என்கவிதைகளைத் தான் என்று
ஆனால் உனக்குத் தெரியுமா
உன்னை விரும்புவது
என் கவிதையல்ல
நான் தான் என்று

ஏக்கம்
முட்கள் தினமும்
காயம் செய்தாய்
ரோஜா இதழ்களை
முத்தமிடுவது யார்?

வேறுபாடு
கனவுக்கும் காதலுக்கும்
ஒரு வித்தியாசம்
கனவுகள் என்பது
ஒரு அமைதியான வாழ்வு
காதல் என்பது
தூக்கமில்லாத உறவு

ஜனனி சந்திரலிங்கம்
என்.எம்.லேன், பருத்தித்துறை

### தற்காலக் காதல்

தற்காலக் காதல்
தெருவோரத்தில் நிற்பது
தற்காலக் காதல்
குளிர்களியகத்தில்
கதைப்பது
தற்காலக் காதல்
சினிமா தியேட்டரில்
படம்பார்ப்பது
தற்காலக் காதல்
தொலைபேசியில்
வாழ்க்கை நடத்துவது
தற்கால காதல்
உண்மையான அன்பை
புரிந்து கொள்ளாதது

ரி.விஜிதா
மயிலிட்டி

### கடவுளுக்கே வெளிச்சம்

கறிகாச்சி
தாழித்து முடித்த
பின்னும்
எதற்காக இந்த
அடுப்பெரிப்பு
புரியவில்லை
பசித்திருப்பவனோ
பரிமாறுஎன்கிறான்
விரதகாரனோ
முடியவில்லை
என்கிறான்
எல்லாம் அந்தக்
கடவுளுக்கே
வெளிச்சம்

புலோலியூர்
வேல்நந்தன்



### சிலிர்ப்பு...

பனித்துளியால் புல்நுனி நனைகையில்
புல்வெளி சிலிர்க்கிறது
தேன்துளியாய் இதழ்கள் நனைகையில்
மலர்கள் சிலிர்க்கிறது
மழைநீரால் இலைகள் நனைகையில்
மரங்கள் சிலிர்க்கிறது
ஆனால் இங்கே
கண்ணீர்த்துளியாய்
நம் கன்னங்கள்
நனைகையில்
சில மனங்கள் மட்டும்
ஏன் சிலிர்க்கிறது.



அ.அஜந்தன்
கந்தர்மடம்

### யாருக்கும் தெரியாமல்

அன்பனே கண்ணீரில்
கரையும் என்னை
கடுகளவேனும் சிந்தித்துப் பார்
அப்போது புரியும் உனக்கு
அமாவாசை இருளாக
அழுதுகொண்டிருக்கிறேன்
யாருக்கும் தெரியாமல்

செல்வராசா விஜிதபாமா
கோண்டாவில் கிழக்கு

# மௌனத்தின் தேடல் – 35



### மெய்ஞ்ஞானம் தன்னைக் கண்டுகொள்ள

விஞ்ஞானம் தன்னில்
விஞ்சிவிட்ட மனிதன்
அதன் விளைவால்
எங்கெல்லாம் வெந்து வெந்து
மடிகின்றான்
மெய்ஞ்ஞானம் தன்னைக்
கண்டுகொள்ள
மனிதன் உடலெல்லாம்
ஊசி ஏற்றி உளம்
உருகிச் செல்கிறான்

சந்நிதி பிருந்தன்

### நேர்த்தி

தமிழினத் துன்பத்தில்
தளைத்தது நேர்த்தி
பக்தியின் விந்தையில்
படிந்தது தமிழினம்
இன்றைய இளசுகள்
பவனியாய்ப் பறவையில்...!

ந.டயாழினி
மிருசுவில்

யுத்த முள் நெஞ்சில்
பக்திமுள் முதுகினில்
எங்கும் முள் எதிலும் வலி
ஏன்? நாம்
தமிழர் என்றபடியாலா?...

தமிழ்நிலவன்
ஆவரங்கால்

### முருகா காப்பாற்றுவாயா?

என் உறவுகளை
இழந்த எனக்கு
தாய் தந்தையாக
எப்போதும் என்னை காப்பாய்
என உன் சந்நிதியின் முன்
காவடி தூக்கி ஆடுகிறேன்
முருகா!

ர.வித்தியா
பருத்தித்துறை

### மாறுவேடம்

சில மனிதவுயிர்களின்
அடாவடித்தனங்களை
அழிக்கவென
ஆடி வருகிறான் முருகன்
உனைத்தேடி
விரைகின்றான் மயிலன்
மனித மாறுவேடம் தாங்கி

கொற்றையூர்
மகே-மேனன்

சுமைதாங்கி நிற்கும் தமிழர் தம்
உள்ளச் சுமை இறக்க
வேண்டுதலோ!
இல்லை
நல்லூர்க் கந்தா!
புனர்வாழ்வில் இருக்கும்
இவன் அண்ணன்
வீடு வர வேண்டுதலோ!

பூநகரியான்
தெல்லிப்பழை
புனர்வாழ்வு நிலையம்

### உத்தமி புத்திரனே

என்ன வரம் கேட்பதற்கு
எட்டு முள்ளில் தூங்குகிறாய்
கேட்ட வரம் தந்திடுவான்
கோல மயில் வாகனனே
உன்னை மட்டும் நினைந்து
உருகி வரம் கேட்டிடாதே
ஊர் இழந்து உறவு இழந்து
உருக்குலைந்த – எம்
உறவுகளின் நலன் நாடி
வரம் கேட்பாய் உத்தமனே
உத்தமி புத்திரனே

நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு

### பரம்பொருளை மறவாதே

நீ கேட்ட வரங்களெல்லாம்
நீ பட்ட வேதனைக்காய்
மனமிரங்கி
ஈந்தமைக்காய் நேர்த்திக்கடன்
தீர்த்தருளி
அலகிலும் முதுகிலும் செடில் குத்தி
பறவைக் காவடி எடுக்கும் பக்தனே
உன் இறுதி மூச்சு இருக்கும் வரை
அப் பரம்பொருளை மறவாதே

க.கனகசபை
சண்டிலிப்பாய்

உயிர் பிழைக்க வைத்ததற்காய்
அல்ல
பறவைக் காவடி இவன்
உறவுகளை
சூழ்ந்திருக்கும் முள்வேலிகளும்
புனர்வாழ்வும்
அகல்வதற்காய்!! இக்காவடி

பத்தாம்பரன்
புனர்வாழ்வு நிலையம்
தெல்லிப்பழை

### வரம்வேண்டி

முட்களெல்லாம் கடந்து
வந்த தமிழர்
நம் உறவுகளை மீட்க
அரோகரா சொல்லி
நல்லூரான் திருவடியில்
காவடியில் பறக்கிறார்.!

நடேசு ஜெயவானுயன்
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி

சங்குநாதம்

# மௌனத்தின் தேடல்- 36



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 10.09.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தென்னாசியாவின் கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றும் அம்பாந்தோட்டை

அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் துறைமுகமானது இலங்கை பொருளாதாரத்தில் வளர்ச்சிபெறவும் ஆசியாவின் முக்கிய பொருளாதார கேந்திர மத்திய நிலையமாக தன்னை தரமுயர்த்த வழிகோலுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்து சமுத்திரத்தை வருடாந்தம் கடந்து செல்லும் சுமார் 70 ஆயிரம் வரையான கப்பல்களின் மூலம் புதிய வியாபார வாய்ப்புகளைப் பெறமுடியுமென இலங்கை அரசாங்கம் கருதுகிறது.

இலங்கையின் புவியியல் அமைவிடமே இத்துறைமுக நிர்மாணிப்பில் முக்கிய செல்வாக்கு செலுத்தும் காரணியாக விளங்குவதாகவும், இதன் காரணமாக இப் பிராந்தியத்தைக் கடந்து செல்லும் கப்பல்களுக்கு தேவையான எரிபொருளினை நிரப்பிக் கொள்வதற்கும், பழுது பார்த்துக் கொள்வதற்காகவும் இத் துறைமுகத்தை பயன்படுத்தும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2 ஆயிரம் ஹெக்டெயர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் இந்தத் துறைமுகத்தில் கப்பல்கள் வந்து நங்கூரமிடுவதற்கு வசதியாக 17 மீற்றர் ஆழப்படுத்தப்பட்டு நாளாந்தம் ஒரு மீற்றர் உயரம் என்ற அடிப்படையில் நீர் நிரப்பப்பட்டது. இந் நீர் நிரப்பு வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஐந்து முக்கிய துறைமுகங்களை நிர்மாணித்து வருவதாகத் தெரிவித்தார்.

உலக நாடுகளின் குப்பைகளைக் கொட்டுகின்ற இடமாக எமது நாட்டை வைத்திருக்க முடியாது. 'மேட் இன் சிறிலங்கா' என்ற பெயருடன் சர்வதேசமெங்கும் புகழ்பெறும் உற்பத்தி பொருட்களைத் தயாரிக்கின்ற பொருளாதார மையமாக இந்நாடு திகழ வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்

கடலை அண்மித்த நிலப்பகுதியில் நிர்மாணிக்கப்படும் உலகின் முதலாவது துறைமுகம் என்ற பெருமையைப் பெற்ற அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாவது கப்பல் வருகை தரவுள்ளது.

துறைமுக வேலைகள் முழுமையாக பூர்த்தியாகின்ற போது 40 கப்பல்கள் ஒரே நேரத்தில் தரித்து நிற்க முடியுமென அரசு தெரிவிக்கிறது. துறைமுகத்தின் முதல் கட்டப் பணிகளுக்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு சீன அரசாங்கம் 85 வீதமான நிதியுதவியைச்செய்தது. நேரடியாக 6 ஆயிரம் வேலை வாய்ப்புகளும் மறைமுகமாக 50 ஆயிரம் வேலைவாய்ப்புகளும் கிடைக்கின்றன.

வரட்சியான மாவட்டமாக வர்ணிக்கப்பட்ட அம்பாந்தோட்டையில் தற்போது சர்வதேச துறைமுகம், சர்வதேச விமான நிலையம், சர்வதேச விளையாட்டரங்கு, அதிவேகப் பாதைகள், புதிய புகையிரதப் பாதைகள் மற்றும் 500 ஏக்கர் பரப்பளவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் சபாரி பார்க் போன்ற பாரிய அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. அது நாடு முழுவதும் இடம்பெறுமாயின், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு வலு சேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.




# அமைச்சர்கள் சொன்னவை!

## பல வருடங்களின் பின் மின்சாரசபை வருமானம் அதிகரிப்பு-சம்பிக்க



எதிர்வரும் 5 வருடங்களில் நிலக்கரி மற்றும் ஏனைய இயற்கை எரிவாயுக்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத் திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதன் மூலம் அதிக செலவை ஏற்படுத்தும் அனல் மின்சாரத் திட்டங்களை, செலவு குறைந்த மின்சாரத் திட்டங்களாக மாற்றுவதே எமது நோக்கமாகும். 1980-ம் ஆண்டு மின்சார அலகு ஒன்றின் விலை 18 சதமாக இருந்தது. இன்று 30 வருடங்களின் பின் 18 ரூபாயாக மாறியுள்ளது. நாங்கள் இதனை எதிர்கால சந்ததியினருக்கு இவ்வாறு அதிகரித்துச் செல்வதற்கு அனுமதிக்கக் கூடாது.

ஜூன் மாதம் இலங்கை மின்சாரசபை 426 மில்லியன் ரூபாயைச் சேர்த்துள்ளது. எமது மொத்தச் செலவு 10 ஆயிரத்து 541 மில்லியன் ரூபாயாகும். நாங்கள் 10 ஆயிரத்து 746 மில்லியன் ரூபாயை சேகரித்துள்ளோம் என மின்சார சபையின் 24-வது ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு தெரிவித்தார்.

## மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில் சேவை புரிய வேண்டும்-ஜீவன்

ஒக்டோபர் 9-ம் திகதி கோலாகலமாக சர்வதேச தபால் தினத்தை கொண்டாடவுள்ளோம். நாங்கள் அனைவரும் ஒரே குடும்பமாக ஒன்றாக கைகோர்த்து தபால் துறைக்காகப் பாடுபடவேண்டும். புதிய தொழில்நுட்பத்துடன் கை கோர்க்கும் போது நீங்களும் பழைய பாரம்பரிய முறையில் இருந்து விடுபட்டு உங்களது சேவைகளை மேற்கொள்ளலாம். தபால் சேவையை மக்கள் மகிழ்ச்சியடையும் விதத்திலும் அவர்கள் அதிர்ச்சியடையாத விதத்திலும் வழங்க நாம் சிந்திக்க வேண்டும் என ஒன்றிணைந்த தபால் சேவையில் 1-ஆ தரத்திற்கு பதவியுர்த்தப்பட்ட அதிகாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் பேசும் போது, தபால் மற்றும் தொலைத்தொடர்புகள் அமைசர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

## அடிக்கற்கள் வளர ஆரம்பித்துள்ளன-பசில் ராஜபக்ஷ

பணியைச் செய்யும் போது சரியாகச் செய்ய வேண்டும். அந்தப் பணியை ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும் என்பதை இங்கு வருகை தந்துள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏராளமான பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவற்றை ஒரே நேரத்தில் செய்ய முடியாது. அனேகமான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. அடிக்கற்கள் வளர ஆரம்பித்துள்ளன. ஆகவே ஜனாதிபதியின் இந்த ஆட்சியில் அவற்றை நாம் நிறைவேற்ற வேண்டும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ கம்பஹா தேர்தல் தொகுதியின் அபிவிருத்தி தொடர்பாக நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

# வர்த்தக செய்தித் துளிகள்

## பணவீக்கம் அதிகரித்துள்ளது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மூலம் கணிக்கப்பட்ட புள்ளிக்கு-புள்ளி அடிப்படையில், பணவீக்கம் ஜூலையில் காணப்பட்ட 4.3 சதவீத்திலிருந்து 5.0 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பு பணவீக்கம் தொடர்ந்து 5 மாதங்களுக்கு வீழ்ச்சியடைந்த பின்பு ஏற்பட்டுள்ளது என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## மல்டிலக் உற்பத்திகள் ஐ.அ.இராச்சியத்துக்கு

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு ஏற்கெனவே ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் மல்டிலக் (Multilac) பெயின்ட் வகைகள் தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் ஏற்றுமதியாவதாக மல்டிலக் பெயின்ட் தயாரிப்பாளர்களான மெக்சன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஐ. அ. இராச்சியத்துக்கான முதல் தொகுதி பெயின்ட்கள் ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன.

## நிலையான வைப்புக்கு உடனடி வட்டி சி.ஐ.எப்.எல்.அறிமுகம்

சென்ரல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன் பினான்ஸ்(CIFL)லிமிட்டட் அதன் 44-வது ஆண்டை முன்னிட்டு கலின்பொலி எனும் வைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் இயங்கும் சி.ஐ.எப்.எல். நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் தமது பணத்தை வைப்பிடும் அடுத்த நிமிடமே அதற்கான வட்டியை பெற்றுக் கொள்ளக் கூடியதாக் இருக்குமென சி.ஐ.எப்.எல்-ன் பிரதி முகாமையாளர் சத்துர லகிந்து தெரிவித்துள்ளார்.

நிலையான வைப்புக்கள் ஆறு மாத காலத்திற்கோ அல்லது ஒரு வருடத்திற்கானதாக வாடிக்கையாளர்களின் விருப்பத்துக்கேற்ப வைப்பிலிடலாம். ஒரு வருடத்திற்கு 12.5%மும் ஆறு மாத காலத்திற்கு 12% வட்டியும் வழங்கப்படும் என்றார்.

## செலிங்கோ காப்புறுதி: வாகன விபத்து நடந்தால் விமானப் பயணச்சீட்டு!

CEYLINCO VIP ON THE SPOT

செலிங்கோ இன்சூரன்ஸ் நிறுவனம் தனது செலிங்கோ வி.ஐ.பி. வாகன காப்புறுதித் திட்டத்தில் புரட்சிகரமான மாற்றமொன்றை அறிமுகம் செய்துள்ளது. இதன்பிரகாரம் செலிங்கோ வி.ஐ.பி.வாடிக்கையாளர் வாகனமும் செலிங்கோ காப்புறுதி வாடிக்கையாளர் அல்லாத ஒருவரின் வாகனமும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானால், இருதரப்பினருக்கும் செலிங்கோ காப்புறுதி நிறுவனம் விமான பயணச் சீட்டுக்களை வழங்கும்.

விபத்தில் சிக்கினால் விமானப் பயணத்துக்கு டிக்கற்றுக்களா? என்று வியப்படைய வேண்டாம். இது எங்கள் தனி வழி என்கிறார் செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் குணவர்த்தன.

விபத்தில் சிக்கிக்கொண்ட வி.ஐ.பி. வாடிக்கையாளர் முன்பாக 2 தெரிவுகள் முன்வைக்கப்படும். முதல் தெரிவில், அவருக்கு அவர் விரும்பிய நாட்டுக்கு பயணம் செய்வதற்கான டிக்கற்றும், இரண்டாம் தெரிவில் விபத்தில் சிக்கிய வாகனத்துக்குப் பதிலாக மற்றொரு வாகனமும் இருக்கும். வாடிக்கையாளர் இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யலாம் என்றார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 111.81 | 113.42 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 171.85 | 175.47 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 142.70 | 146.21 |
| சுவிஸ் பிராங் | 109.42 | 112.96 |
| கனேடிய டொலர் | 105.16 | 108.66 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.84 | 103.92 |
| சிங்கப்பூர் டொலர் | 82.63 | 84.67 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.42 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.65 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ௮.௮ சதவீதமாக உயர்வு

நடப்பு நிதி ஆண்டின்(2010/11) முதல் மூன்று மாதங்களில் இந்தியப் பொருளாதாரம் 8.8 சதவீதம் உயர்ந்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் பெறப்பட்ட அதிகளவிலான காலாண்டு வளர்ச்சி இதுவேயாகும்.

உலகப் பொருளாதார தொய்வு நிலைக்கு முன்பாக இந்தியா கண்ட வளர்ச்சியின் அளவு தற்போது எட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக சீனாவுக்கு அடுத்து வேகமாக வளரும் பொருளாதாரம் என்ற நிலையை இந்தியா எட்டியுள்ளது.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், திட்டமிட்ட நிதிக்கொள்கையால் இந்தியா, வேகமான பொருளாதார வளர்ச்சியை எட்டிவருகிறது.

ஒவ்வொரு துறைவாரியாக பார்க்கும்போது விவசாயத்துறை 2.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதன் வளர்ச்சி 4 சதவீதமாக இருக்கும் என்று முன்னர் கணிக்கப்பட்டது. கடந்த ஆண்டு இது 1.9 சதவீதமாக இருந்தது. உற்பத்திதுறை வளர்ச்சி 12.4 சதவீதம். கடந்த ஆண்டு 3.8 சதவீதமாக இருந்தது.

கார்களின் விற்பனை அதிகரித்துள்ளது. தொலைத்தொடர்புத்துறையிலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

## அமெ. பொருளாதார வளர்ச்சி 1.6 சதவீதமாக சரிவு

மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு அடிப்படையில் உலக அளவில் முதலிடத்தில் உள்ள அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி சென்ற ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் 1.6 சதவீதமாக சரிவடைந்துள்ளது. இறுதிக் கட்ட மதிப்பீடு வாயிலாக இது தெரியவந்துள்ளது. முதல் கட்ட கணக்கீட்டின்படி இது 2.4சதவீதமாக இருந்தது. இதற்கு முந்தைய காலாண்டில் இந்த வளர்ச்சி 3.7 சதவீதமாக இருந்தது. இது, அந்நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து முழு அளவில் மீளவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. சென்ற ஜூன் மாதத்தில் அமெரிக்காவின் இறக்குமதி கடந்த 26 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகவும் அதிகரித்ததே காரணமாகும்.

இதனையடுத்து, அம்மாதத்தில் அந்நாட்டின் வர்த்தக பற்றாக்குறை, கடந்த 19 மாதங்களில் இல்லாத அளவிற்கு 5 ஆயிரம் கோடி டொலராக உயர்ந்துள்ளது. சென்ற ஜூலை மாதத்தில், அமெரிக்காவில் புதிய வீடுகள் விற்பனை கடந்த 47 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 12.4 சதவீதமாக குறைந்துள்ளது. அங்கு வேலை இழப்பு விகிதமும் 9.5சதவீதம் என்ற அளவில் அதிகமாக உள்ளது. இதனால் வங்கிகளில் கடன் வாங்கியவர்களால் பணத்தை திரும்பச் செலுத்த முடியவில்லை. இதனையடுத்து அமெரிக்காவில் வங்கிகள் திவால் ஆவது தொடர்கதையாக உள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5634.15 | 5880.49 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 5897.11 | 6066.81 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 14798.04

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* றிப்கொம்பர்ஸ் ஹோட்டல்(7.30), அபான்ஸ்(263.00), த பினான்ஸ் கம்பனி(57.20), கொழும்பு பார்மசி (966.70), சதோச மோட்டார்ஸ்(209.30), சிறிலங்கா ரெலிகொம்(48.60).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ஜோன் கீல்ஸ்(169.10), ஆஸிரி சென்ரல் (135.50), குருவிட்ட ரெக்ஸ்ரைல்ஸ் (33.00), எஸ்.எம்.பி.லீசிங் (2.50), சிங்கலங்கா(192.50).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# காவலூர் மண்ணில் கலங்காமல்

# அருட்பணி X.W. ஜே

# சேவை நயப்பு வி

## சேவையின் செம்மல்



ஊர்காவற்றுறை பங்கில் பங்குத் தந்தையாக கடந்த 6 வருடங்கள் அரும்பெரும் சேவையாற்றி வெளி நாடு செல்லவிருக்கும் அருட்தந்தை X.W.ஜேம்ஸ் அடிகளார் அவர்களை நன்றியோடு நினைவு கூர்ந்து பாராட்டி வாழ்த்துகின்றேன். காவலூரின் நான்கு ஆலயங்களிலும், எழுவைதீவிலும் இவர் ஆற்றிய ஆன்மீக, சமூகப் பணிகள் ஏராளம் ஏராளம். மறைக்கல்வி, அருட்சாதன ஆயத்தம், இளைஞர் உருவாக்கம், குடும்ப தரிசிப்பு போன்ற இன்னோரன்ன பணிகள் இவரால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டதை யாவரும் அறிவோம். அருட் தந்தை ஜேம்ஸ் தூரநோக்குடைய சிறந்த நிர்வாகி, துடிப் புள்ள செயல்வீரன், சோதனைகளை சாதனைகளாக்கியவர்.

இவரது பயணத்திலும் தொடரும்பணி வாழ்விலும் நல்லாயனாகிய யேசுகிறிஸ்து கரம் பிடித்து வழிநடத்தவும் இறையாசீர் என்றும் இவரோடு இருக்க ஆசித்து வாழ்த்தி நிற்கிறேன்.

**அருட்பணி ஜேம்ஸ் சிங்கராயர்,**
**அதிபர்,**
**யா/புனித அந்தோனியார் கல்லூரி,**
**ஊர்காவற்றுறை.**

## ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



இறையருள் அருட்பணியாற்றி வரும் அருட்திரு X.W. ஜேம்ஸ் அடிகளார் புனிதரின் பாதையில் காவலூர் மக்களை வழிப்படுத்திச் சென்ற ஓர் உத்தமராவார்.

உயர்ந்தவர், தாழ்ந்தவர், என்ற பேதங்கள் கடந்து, ஒழுக்கத்தாலும் அன்பாலும் தெய்வ பக்தியாலும் நேர்மையாலும் மனித்துவத்தில் இறை தூதுவராக நின்று வழிசமைத்த சான்றோன் என்றே கூற முடியும்.

அவர்தம் சேவையின் சுவடுகள் இனிவரும் அருட் பணியாளருக்கு நல்உதாரணமாய் அமையும் என நம்புகிறேன்.

இவ் அருட்பணியாளரின் சேவை இன்று போல் என்றும் தொடர மனதார வாழ்த்தி வணங்குகின்றேன்.

**க.ஸ்ரீமோகனன்,**
**உதவி அரசாங்க அதிபர்,**
**உதவி அரசாங்க அதிபர் பணிமனை,**
**ஊர்காவற்றுறை.**

## அர்ப்பணத்தின் படியிலே



இறைபணியாற்ற இறையாசி பெற்று
இதமாக பணியாற்ற வந்த X.W.ஜேம்ஸ்
அடிகளாரே
உம் பாதம் எம் மண்ணில் பதியவே
கலையும் மறை அறிவும் வளமாக செழித்தது
உம்மாலே தான் தந்தையே

கடல் அலை துள்ளிப் பாயும் எழுவைதீவிலும்
காவலூர் மண்ணிலும் செப்பமாக
திருப்பலியும் திருவருட்சாதனங்களும் வழங்கி
குருவாக இருந்து விசுவாசத்தை ஆழப்படுத்தினீரே
இளம் பராயத்தில் இளமைத் துடிப்புடன்
வீரநடையும் பூண்டு இன்னிசைக் குயிலின்
கான்க மழையில் எம் இதயங்களை கனியச் செய்து
காவிய நாயகன் பாதத்தில் எம்மை இணைய வைத்தீரே

சமூகத்தில் நீர் செய்த பணிகளையும்
சேவைகளையும் சொல்லவே உடல் சிலிர்க்கிறது
சோதனைகளை சாதனைகளாக மாற்றி குருவாக மட்டுமல்ல
நண்பனாக , சகோதரனாக , நல்ல ஆயனாக உடன் நடந்தவரே

ஆறுவருடங்கள் எம்மண்ணில் பணியாற்றி
வெளியூர் செல்லும் தந்தையே
உம் பயணமும் பணிவாழ்வும் இறைவனுக்கு
மாத்திரமே மகிமை அளிக்க இறையாசீர் கேட்டு வாழ்த்துகின்றோம்.
வளர்க உம் இறைபணி வாழ்வு.

**அருட்சகோதரி சகாயநாயகி,**
**அதிபர், யாழ்/ சிறிய புஸ்பம் மகளிர்**
**மகாவித்தியாலயம், கரம்பன்**

## பணி வாழ்வின் வழிகாட்டி



கடந்த ஐந்து வருடங்களாக ஊர்காவற்றுறைப் பங்கிலே பணி புரிந்து மாற்றமாகிச் செல்கின்ற பங்குத் தந்தையும் எனது நண்பனுமாகிய அருட்பணி X.W.ஜேம்ஸ் அடிகளாருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். இவரது பணி வாழ் வைப் பார்க்கின்ற போது நல்ல தொரு இறைபற்றாளனாகவும் முன் மாதிரியான குரு வாகவும் சிறந்த ஓர் ஆசானாகவும் திகழ்கின்றார். சிரித்த முகத்துடன் அனை வரையும் வரவேற்கும் குணம், கலையுணர்வுடன் கூடிய அலங்காரங்கள், சிறுவனாக மாறிச் சிறுவர்களுடன் விளையாடும் விதம், அல்லல்படும் மக்களை ஆதரித்து வழி நடத் தும் விதம், தேவையுணர்ந்து உதவி புரியும் உயரிய பண்பு போன்றவை இவரிடத்தில் காணப் படும் சிறந்த பொக்கிஷங்கள். இவரது பணிவாழ்வு சிறக்கவும் செல்லும் இடத்திலும் இவரது பணி வாழ்வு நல்ல முறையில் அமையவும் வாழ்த்துக்கள்.

**வைத்திய கலாநிதி அருண புண்ணியமூர்த்தி,**
**ஆதார வைத்தியசாலை,**
**ஊர்காவற்றுறை.**



## வாழ்த்

முத்தாக முது கலைச்
சொத்தாகப் புகழ் பெற்ற
குருநகர் துறை மண்ணிலே
வித்தாக நெத்தாக
சொத்தாக வந்த எம்
குருமணி ஜேம்ஸ் அடிகளே

தொண்ணூற்று ஏழதன்
ஆனிநற் திங்கள்
ஆண்டவன் பணியாளனாய்
அபிசேகம் பெற்று நற்
சுவிசேகப் பணி சொல்லும்
அருளாளனாய் உதித்தீர்

அருள் நிறை கரத்துடன்
ஆண்டவர் செய்தியை
அனுதினமும் உரைத்து
இரண்டாயிரத்து நல்
ஐந்ததாம் ஆண்டதில்
காவலூர் தந்தையானீர்

போர் எனும் சூரனால்
வேரற்ற விருட்சமாய்
ஊரெல்லாம் சிதைந்த காலம்
பரமனின் தூதனாய்
பறந்தோடி வந்திட்ட
பண்பு சேர் எம் தந்தையே

காவலூர் மண்ணிலே
காலூன்றி வேர் விட்டு
கம்பீர நடை போட்டு நீர்
கலிகால யுகத்தில் நாம்
தெம்போடு வாழ்ந்திட
அன்போடு வழிகாட்டினீர்



ஊர்காவற்றுறை.
05.09.2010

## வாழ்த்துவோர்:-

| | | | | |
|---|---|---|---|---|
| சிறிஹோட்டல் | குலம் மரக்காலை | திரேசா பந்தல் | செல்வா வேக்ஸ் சொப் | ராஜ்குமார் |
| மாறன் போட்டோ அன் வீடியோ | நகோமியா தேநீர் சுரபி | புவனேஸ்வரன் | தயா -இத்தாலி | பாலா அன் சன்ஸ் |

# மல் பணி செய்த காவிய நாயகன்
# ஜம்ஸ் அடிகளாரின்
# ழா சிறப்பு மலர்



த்துப்பா



பேச்சிலே கண்ணியம்
மூச்சிலே கடமை - இரு
கண்களென வாழ்ந்திருந்து
வீச்சு விழிப் பார்வையால்
ஆட்சி புரிந்தெங்களை
அணைத்திட்ட அன்புருவமே

கர்த்தரின் வார்த்தையை
கரத்திலே எடுத்த நீர்
காவலூர் மட்டுமன்றி
கரம்பனூர் மெலிஞ்சியூர்
எழுவையூர் அனலையூர்
நயினையூர் வரை விதைத்தீர்

தடம் மாறும் எங்களின்
விடலைகள் வாழ்வதை
புடம் போட்டு பொலிவாக்கிட
ஆன்மீக சங்கங்கள்
சபைகளை நிறுவி நீர்
ஆன்மீக நெறி காட்டினீர்

கல்வியில் கலைகளில்
ஆன்மீக அருளுடன்
கரம் கோர்த்துப் பயணித்து நீர்
செய்திட்ட சேவைக்கு
சொல்ல மொழி ஏதுமில்லை
வல்லவனே வாழி நீவீர்!

பக்தியில் பண்பதில்
பரமனின் வழியதில்
பாருக்குள் மலர்ந்த வாழ்வு
நித்தியம் போற்றிட
நிமலனின் அருளுடன்
நீடூழி நிலைத்திடட்டும்.



அன்புடன் வாழ்த்தி வழங்குவோர்
பங்கு மக்கள்

## வாழ்த்துரை

குறள் (348) துறவு (35)
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப் பட்டார் மற்றை யவர்

விளக்கம்



முற்றும் துறந்தவரே உயர்ந்த நிலையினர் ஆவர். அவ்வாறு துறக்காத மற்றவர் ஆசை வலையில் அகப்பட்டுக் கொண்டவர் ஆவார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2010 வரை ஊர்காவற்றுறை பங்குத் தந்தையாக கடமையாற்றிய திரு.X.W.ஜேம்ஸ் அவர்கள் மாற்றலாகி அமெரிக்கா செல்வதையொட்டி அவர் இப் பகுதி மக்களுக்கு ஆற்றிய ஆன்மீகத் தொண்டை நினைவு கூர்வோமாக.

அவருடைய இப்பணி மேலும் சிறப்பான முறையில் அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பிரம்மஸ்ரீ சந்திரகாந்த சிவாச்சாரியார் M.A,
சமயமும் தத்துவமும்
பிரதம சிவாச்சாரியார், தர்ம பரிபாலகர்,
ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன் ஆலயம்.

## உறுதியோடு பணியாற்றிய அருட்தந்தை



ஊர்காவற்றுறை நூற்றாண்டுகளில் உறுதியான கிறிஸ்தவத்திற்கு வித்திட்ட வரலாற்றுப் பங்குத் தந்தையர்கள் யாழ். திருச்சபையின் இறையரசுப் பணியில் மிக முக்கியமானவர்கள். அந்த வகையில் கடந்த வருடங்கள் அரும் பணிபுரிந்த அருட் தந்தை X.W.ஜேம்ஸ் அடிகளும் காவலூரின் கிறிஸ்தவ விசுவாசத்தின் வளர்ச்சியில் மிக முக்கிய பணியாற்றியவர்.

இன்னும் கூறுவதானால் மிகவும் இக்கட்டான போரின் கொடு ரங்களுக்குள்ளும் கொலைகள், இடப்பெயர்வுகள், ஆட்கடத்தல்கள் என்பவற்றுக்குள்ளும் உறுதியோடு பணியாற்றியவர். இடம்பெயர்ந்து பயம், பீதியோடு அலைந்தவர்களுக்கு அரவ ணைப்புக் கொடுத்தவர். மக்கள் மீண்டும் சொந்த மண்ணுக்கு மீண்ட போதும் இவர் பணிமிக முக்கியமானது. ஒட்டு மொத்தமாக காவலூரின் வரலாற்றுச் சிறப்பு மிக்க பங்குத் தந்தை என்றும் நாம் குறிப்பிடலாம்.

எல்லா வேளையிலும் குருக்களை இன்முகத்தோடு வரவேற்பவர். இன்சொல் பேசுபவர், அன்போடு அணுகுபவர் என்று பண்புகளை அடுக்கிக் கொண்டேசெல்லலாம். வெளிநாடு செல்லும் எம் சக குருவிற்கு எம் இதய பூர்வ நன்றிகள், வாழ்த்துக்கள் தெரிவிக்கிறோம்.

அருட்பணி றொபின்சன் யோசப்,
கிறிஸ்து இல்லம்,
ஊர்காவற்றுறை .

## யா/ஊ/ புனித மரியாள் றோ.க. மகளிர் வித்தியாலய அதிபரின் வாழ்த்து

2005.06.28 இல் இருந்து இன்றுவரை கடலலை சூழும் காவலூரில் அரும்பணி ஆற்றி புதிய பணிக்காக பயணத்தை ஆரம்பிக்கும் அருட்பணியாளர் வின்சன் ஜேம்ஸ் சேவியர் அடிகளாரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



2006 இல் அல்லைப்பிட்டியில் ஏற்பட்ட அவலம் காவலூர் மக்களை பெரிதும் பாதித்தது. அந்த நேரத்தில் அடைக்கலம் தேடி வந்த மக்களை ஆதரித்து இவர் ஆற்றிய அன்புப்பணி மறக்க முடியாது. எதிர்பாராத விதத்தில் தன் சகோதர குருவை இழந்தும் கூட மனம் தளராமல் தன்பணியை ஆற்றினார். பிள்ளைகளின் கல்வியில் அக்கறை, சிறப்பாக மறை அறிவைப் பெறுவதற்கு இவர் ஆற்றிய முயற்சிகள் பாராட்டுதற்குரியது. விளையாட்டின் மூலம் பல இளைஞர்களை ஒன்று சேர்த்து பல உள்ளங்களை இறைவன்பால் திருப்பியதை நாம் அறிவோம்.

*நீங்கள் என் சாட்சிகள் உலகினை வெல்லுங்கள்* என்ற வாக்கிற்கேற்ப இவரின் புதிய பணித்தளம் அமையட்டும். 5 ஆண்டுகள் பெற்ற அனுபவங்கள் இவரின் வாழ்விற்கு உரமாக அமையட்டும். நித்திய குருவாகிய கிறிஸ்துவின் குருத்துவப்பணி நானிலம் எங்கும் செழித்திட இறையருடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்சகோதரி எலிசபெத்தம்மா,
அதிபர்,யா/ஊ/புனித மரியாள் றோ.க மகளிர் வித்தியாலயம்.

## குருத்துவப் பணியில் மகத்துவம் கண்டவர்



ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தையாக 28.06.2005 இல் தனது பணியைப் பொறுப்பேற்றுக் கொண்டவணக்கத்திற்குரிய X.W.ஜேம்ஸ் அடிகளார் ஆண்டவருக்குச் செய்யும் சேவையே தனது ஆன்மீக சேவையாக ஏற்று ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயம், புனித அந்தோனியார் ஆலயம், புனித சூசையப்பா ஆலயம், புனித யாகப்பர் ஆலயம், எழுவைதீவு புனித தோமையப்பர் ஆலயம் என்பனவற்றைப் புனரமைப்புச் செய்யும் புனிதப் பணிகளை மேற்கொண்டதுடன் அவ்வாலயங்களின் திருப்பலிப் பூசையினை ஒப்புக்கொடுத்து ஊர்காவற்றுறை வாழ் மக்களின் அன்பிற்கும் நன்மதிப்பிற்கும் உரிய பங்குத் தந்தையாக விளங்கினார். அடிகளார் ஆண்டவரால் தனக்களிக் கப்பட்ட குருத்துவப்பணிக் கடமைகளை ஊர்காவற்றுறை வாழ் மக்களுக்கு செவ்வனே நிறைவேற்றி 07.09.2010 அன்று ஊர்காவற்றுறையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் செல் கிறார். அடிகளார் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றாலும் அவரது சேவை எமக்கு என்றும் இருக்க வேண்டும் என ஆண்டவரிடம் இறைஞ்சுவதுடன் அவர் பல்லாண்டு காலம் ஆண்டவருக்கு சேவை செய்ய வேண்டும் என ஆண்டவரைப் பிராத்திக்கின்றேன்.

தி.மதிவதனன்,
அதிபர்,யா/ஊர்காவற்றுறை றோ.க. த. ஆண்கள் பாடசாலை.

## வாழ்த்துவோர்:-

| | | | | |
|---|---|---|---|---|
| விக்ரர் ரவல்ஸ் | A.S.R. ரவல்ஸ் | சிம்சன் மரக்காலை | கமலகுமார் கட்டட ஒப்பந்தகாரர் | மரியசேவியர் கட்டட ஒப்பந்தகாரர் |
| டினோஷன் பல்பொருள் வாணிபம் | மணிகண்டா களஞ்சியம் | அம்பிகா களஞ்சியம் | லாகுஷன் வெதுப்பகம் | ஜெறோமி வெதுப்பகம் |

# ஈழத்தவர் வரலாறு

26

அவ்விடம் யாழ்ப்பாணம் என்றழைக்கப்பட்டது. அப்பெயர் பின் பறங்கிக்காரர் கட்டிய நகரிக்காகி ஈற்றில் குடாநாடு முழுவதற்குமுரியதாகி விட்டது.

கண்தெரியாத ஒரு யாழ்பாடிக்கு



ராஜராஜசோழன்

இசைக்குப் பரிசாகத் தனது இராச்சியத்திற்கு வடக்கே இருந்து ஒரு மணல் வெளியே தமிழ்மன்னன் ஒருவன் பரிசளித்ததாகக் கூறும் இச்சம்பவத்தின் உண்மை, பொய் எவ்வளவு என்பதை ஆராய்வதை விடுத்து மணல் வெளியாகத் கருதப்பட்ட யாழ்ப்பாணம் வடக்கேயிருந்தது என்றால், அதைப் பரிசாகத் தந்த மன்னன் இருந்தவிடம் தென் நிலப் பரப்பாக இருந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதே.

**பாண்டியர் படையெடுப்பு**

தென்னிந்தியாவில் தமிழரசுகள் வலிமை பெற்றிருந்த காலவேளைகளில் கடல்கடந்து இலங்கை மீது படையெடுப்புகள் மீண்டுந் தொடங்கின.

## 4. சிங்கை நகர் அரசு

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

சிங்கை நகரிலிருந்து ஜெயதுங்கன் வடவிலங்கையை ஆண்ட காலத்தில், முதலாம் சேனன் என்பான் அனுராதபுரத்திலிருந்து ஆட்சிசெய்தான். ஸ்ரீமாற வல்லபன் (கி.பி.815-862) என்ற பாண்டிய மன்னன் இலங்கைக்கு படையெடுத்து வந்து ஜெயதுங்கனை வென்றதோடு, சேனனை புறமுதுகிடச் செய்து திறை பெற்றுச் சென்றான்.

ஜெயதுங்கனின் பின்னர் உத்தரதேசத்தை அவன் சந்ததியினரே ஆண்டிருக்க வேண்டும். அவர்கள் தென்னிந்தியத் தமிழரசர்களுக்கு அல்லது தென்னிலங்கைச் சிங்களவரசர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்திருக்க வேண்டுமெனத் துணியலாம். ஒன்பதாம் நூற்றாண்டில் உத்தரப்பிரதேசம் 2ஆம் கஸ்ஸப மன்னனின் ஆதிக்கத்தின் கீழ் உட்பட்டிருந்தது என்பதை கந்தரோடைக் கல்வெட்டிலிருந்து அறியலாம் என கா.இந்திர பாலா குறிப்பிடுகிறார். மேலும் பத்தாம் நூற்றாண்டில் உத்தரதேசம் 4ம் மஹிந்த என்ற சிங்கள மன்னனின் ஆதிக்கத்துக் குட்பட்டிருந்தது.

பத்தாம் நூற்றாண்டில் தென் னிந்தியாவிலிருந்து ஒரு படையெடுப்பு யாழ்ப் பாணத்திலே நடைபெற்றபோது. அப்பொழுது அநுராதபுரத்தை ஆண்டு கொண்டிருந்த நான்காம் மஹிந்த மன்னன் (956-972) உடனே யாழ்ப்பாணத்துக்கு படையனுப்பி அப்பகுதியை மீண்டும் விடுவித்தான் என சூளவம்சம் கூறும். படையெடுப்பு நடாத்திய தென்னிந்திய மன்னன் சுந்தரசோழன் எனப்படும் 2ம் பராந்தகனாவான். பின்னர் மீண்டும் கி.பி. 1003 இல் ராஜராஜசோழன் இலங்கை மீது படையெடுத்து வெற்றி கொண்டான்.


**சோழராட்சி**

உருகுணை தவிர்ந்த பிறபாகங்கள் சோழராட்சிக்குட்பட்டன என்று சூளவம்சம் கூறுமிடத்து யாழ்ப்பாணப் பகுதியும் பொலநறுவையிலிருந்து ஆட்சி நடத்திய சோழருடைய ஆதிக்கத்திற்குள் அடங்கியிருந்த தென்பது மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.11ஆம் நூற்றாண்டில் சோழ ஆட்சியின்போது பொறிக்கப்பட்ட சில கல்வெட்டுக்கள் யாழ்ப்பாணத்தில் கிடைத்துள் ளன. முதலாவது சாசனம் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தது.

இது யாழ்ப்பாணக் கோட்டைக்குள்ளே கண்டுபிடிக்கப்பட்டது. வேறு இரு சோழராட்சிக் காலத்துச் சாதனங் கள் ஊர்காவற்றுறைக் கோட்டைக்குள்ளே கண்டுபிடிக்கப்பட்டன.இவை அனைத்து 11ஆம் நூற்றாண்டி முற்பகுதியில் சோழராட்சி உத்தர தேசத்தில் நிலவியதை உறுதிப்படுத்துகின்றன.

உத்தரதேசத்தை சோழரால் நியமிக்கப்பட்ட அரசு பிரதிநிதிகள் பலர் நிர்வகித்து வந்தார்கள் என நம்ப இடமுண்டு. கி.பி. 948 ஆம் ஆண்டளவில் புவனேகபாகு அல்லது புவனேசவாசர் என்பவர் சிங்கை நகர் பகுதிக்குரிய அரச பிரதிநிதியாக இருந்திருக்க வேண்டும்.(புவனேகபாகு தமிழ்ப்பெயர், வீரவாகு போல) இவன் சோழ பராந்தகனின் பிரதிநிதியாக இங்கு நியமனம் பெற்றிருக்க வேண்டும்.

ஏனெனில் கி.பி.945 கால கட்டத்தில் சோழ பராந்தகன் படையெடுத்து இலங்கைக்கு வந்து சிங்களவரசனானான். நான்காம் உதயனை புறங்கண்டான் என்றும் சிங்கைநகர் அரசனைக் கொன் றான் என்றும் வரலாற்றுக் குறிப்புள்ளது.இச்சோழ மன்னனின் பிரதிநிதியாக புவனேகபாகு சிங்கை



பதவியாவில் (அனுராதபுரம் மாவட்டம்) உள்ள சோழர் காலத்துக்கோயிலாகிய ரவிகுல மாணிக்க ஈஸ்வரம் என்ற கோயிலின் அழிபாடுகள். ரவிகுல மாணிக்கம் என்பது முதலாம் ராஜ ராஜ சோழனுடைய விருதுகளுள் ஒன்று)

நகரில் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளான்.

10ஆம் நூற்றாண்டில் பார்சியாவின் அரசனான டோவாக் என்பவன் கர்ஷாஸ்ப் என்பவனின் தலைமையில் அனுப்பிய படையொன்று கலா என்றதுறையில் (கலா என்பது ஊர்காவற்றுறை - களபூமி (இறங்கி இருநாட் பயண தூரமுள்ள ஓரிடத்தில் வாகு என்னும் அரசனை வெற்றிகொண்டது என்று அசேதி என்ற பார்சியன் கர்ஷாஸ்ப் நமா என்னும் கிரந்தத்தில் எழுதியுள்ளான்.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

10ஆம்நூற்றாண்டில் வாகு என்னும் பெயருடன் இலங்கை அரசரில் யாழ்ப்பாண மொழிந்த பிறவிடத்தில் எவரும் இருந்திலர். வாகு என்று பார்சிய நூல் குறிப்பிடும் மன்னன் அல்லது சிற்றரசன் புவனேகபாகுவாக இருக்கலாம். (தொடரும்)

# புலம்பெயர் சிற்றிதழ்களின் அரசியல்

02

## செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

மாற்றுக் கருத்து தெரிவிப்பதற்கான உரிமை அங்கு முற்றாக இல்லாத நிலை விஸ்வரூபம் எடுத்துள்ளது. எனினும் இந்த நிமிடம் வரை அரசின் ஒடுக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் மக்களிடையே அரசிற்கெதிரான எதிர்ப்புணர்வு என்பது ஒன்றும் புதிதாகக் காட்டப்படவேண்டிய ஒன்றல்ல. ஆனால் அதை சரியான திசை வழியில் அணுக முடியாத வகையில் இன்றைய யதார்த்த நிலை அமைந்துள்ளது. (ஆசிரிய தலையங்கம்: தேனீ, யூலை 1991 , ஜேர்மனி)

"தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்டத்தில் தோன்றியுள்ள இன்றைய தேக்க நிலையைக் களைந்து போராட்டத்தை புரட்சிகரமாக முன்னெடுக்க வேண்டும் என்ற அக்கறை தமிழ் மக்கள் மத்தியிலுள்ள முன்னேறிய பிரிவினரிடையே பரவலாகக் காணப்படுகின்றது. இன்றைய பாசிச தலைமைக்குப் பதிலாக உண்மையான புரட்சிகர மாற்றை (Real Revolutionary Alte rnative) உருவாக்குவது பற்றியும் அதிகம் பேசப்படுகிறது" (ஆசிரிய தலையங்கம்: உயிர்ப்பு 3, 1993, லண்டன்)

"அவுஸ்திரேலியா போன்ற பல்லின மக்கள் வாழ்கின்ற நாடுகளில் ஒவ்வொரு இனமும் தனித்துவத்துடனும் தமது அடையாளத்தைப் பேணியும் வாழ்வது கடினமானது. இது கடலில் எதிர்நீச்சல் போடுவது போன்றது. புகுந்த புதிய இனத்தினர், குறிப்பாக இளையோர் புகுந்த நாட்டின் பழக்க வழக்கங்களில் ஊறிப் போவதும் அவர்கள் அவுஸ்திரேலியராக தம்மை நினைப்பதும் மாற்றிக் கொள்வதும் இயல்பு. தமிழர்களை தமது அடையாளத்துடனும் தமிழ் உணர்வுடனும் இங்கு வாழ வழிசெய்ய பல அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் உதவி வருகின்றன. ஆனால் எல்லாமே எமது வீடுகளிலிருந்தே ஆரம்பிக்கின்றன என்பது உண்மை. நாம் நமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்.(ஆசிரிய தலையங்கம்: கலப்பை 50ஆவது இதழ், ஐப்பசி 2006 அவுஸ்திரேலியா)

இவற்றைக் கவனத்திற் கொள்ளும் போது சிற்றிதழ்களின் அரசியல், காலம், ஈழச்சூழல் என்பன தெளிவாகப் புலப்படுகின்றன. பொதுவாக வெளிவந்த எல்லாச் சிற்றிதழ்களும் முன்வைத்த பொருட்பரப்பை பின்வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

1. தமிழ்ப் போராளிகளின் அரசியல் நிலைப்பாடு.
2. தமிழ்ப் போராளிகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலை.
3. இலங்கை அரச படைகள் தமிழ் மக்கள் மீது நடத்திய வன்முறைகள்
4. இந்தியப் படைகள் தமிழ் மக்கள் மீது நடத்திய வன்முறைகள்
5. தமிழர்களுக்கான அரசியல் அதிகாரம்
6. தமிழ்மொழி தமிழ்ப்பண்பாட்டு பேணுகை
7. சாதிய மேலாதிக்கம்
8. புகலிடச் சூழலில் ஈழத்தமிழர்கள் எதிர்கொண்ட நிறவாத ,இனவாத வன்முறைகள்
9. மூன்றாம் உலக நாடுகள் மீது வல்லரசுகளின் ஆதிக்கம்
10. குடும்பத்திலும் வெளியிலும் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகள்
11. நவீன கதைசொல்லல் முறை
12. இலக்கியத்தில் புதிய வடிவங்களைப் பரீட்சித்தல்

ஆகியவற்றை புகலிடச் சிற்றிதழ்கள் முதன்மையாக முன்வைத்தன. இவற்றினை மையமாகக் கொண்டே அதிகமான படைப்புக்கள் வெளிப்பட்டன.

**எதிர்ப்புக்கூறு**

சிற்றிதழ்களில் வெளியாகும் படைப்புக்களைப் பொறுத்தவரையில் அவை அரசியல் ரீதியில் வைத்துப் பார்க்கவேண்டியவை. படைப்புக்களில் அரசியலுக்கு முதன்மை கொடுக்கும் போக்கு 80 களில் இருந்து தொடர்கிறது. சிற்றிதழ்க் குழுக்களின் தெரிவு சிறுகதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ ஓவியமாகவோ இருந்தாலும், அது அரசியல் ரீதியில் முதன்மை பெறவேண்டும் என்பதே. அரசியல் விமர்சனம் அதிகமும் உயிர்ப்பு, தூண்டில், சமர் ஆகியவற்றில் முன் வைக்கப்பட்டன. அவற்றில் இலங்கை அரச படைகளின் மீதானதும் அரச ஆட்சியாளர்கள் மீதானதும் ஒருபுறமெனில் மறுபுறம் ஈழத் தமிழ்ப் போராளிகள் மீதான தாக இருந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் போராளிகள தமக்குள்ளேயே முரண்பட்டுக் கொண்டமையும் மோதத் தொடங்கியமையும் இயக்கங்களின மீதான அதிருப்திக்குக் காரணமாக அமையலாயின.

இவற்றுக்கு அப்பால் 90 களில் இந்தியப்படைகள் மீதான விமர்சனமும் முன்வைக்கப்பட்டது. மேலும் ஒரு பகுதியாக மூன்றாம் உலக நாடுகளின் மீது அடக்குமுறையையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்தும் வல்லரசுகளை நோக்கிய விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, சக தமிழ்ப் போராளிக் குழுக்கள் மீது அடக்குமுறையை வெளிப்படுத்தியமை என்பவற்றுக்காக கால் நூற்றாண்டுக்கு மேல் ஈழத்தில் முதன்மை பெற்றிருந்த விடுதலை அமைப்பே அதிகமும் புலம்பெயர்ந்தவர்களின் சிற்றிதழ்களில் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது.

சுப்பிரமணியம் குணேஸ்வரன்
B.A(Hons),PGDE,M.Phil
ஆசிரியர்,
வ/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்.

இந்த அடிப்படையிலான எதிர்ப்பு அரசியலை முன்னிறுத்தி கணிசமான புகலிடச் சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் தூண்டில், இரவல் தூண்டில், சமர், புதுமை, உயிர்ப்பு என்பன முக்கியமானவை. (தொடரும்)

# விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட விமானப்படை வீரர் கைது

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஆதரவாக செயற்பட்ட விமானப்படை வீரர் ஒரு வரை கொழும்பு விசேட பொலிஸ் பிரிவினர் சீதுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்துள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானப்படையிலிருந்து விலகித் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு குறித்த உத்தியோகத்தர் உதவிகளை வழங்கியுள் ளார் எனவும் விடுதலைப்புலிகளின் சார்பில் கடமையாற் றியமைக்காக இவருக்கு மாதாந்தம் தலா 50 ஆயிரம் பணம் வழங் கப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்படுகிறது.

கைது செய்யப்பட்ட குறித்த விமானப் படை வீரர் கடந்த காலங்களில் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதி களிலிருந்து வெடிபொருட்களையும் விடு தலைப்புலி உறுப்பினர்களையும் தெற்கிற்கு கொண்டு வர குறித்த விமானப்படை வீரர் ஒத் துழைப்பு வழங்கியுள்ளார் எனவும் கிழக்கு விமானப்படை முகாம் ஒன்றில் குறித்த நபர் கடமையாற்றி வந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழர்கள் 52 பேரை வெளிநாட்டுக்கு அனுப்ப முயற்சித்த இலங்கையர் கைது

இலங்கைத் தமிழர்கள் 52 பேரை வெளி நாட்டுக்கு அனுப்ப முயற்சி செய்ததாக இலங் கையைச் சேர்ந்த ஒருவரை குற்றாலத்தில் வைத் துப் பொலிஸார் கைது செய்தனர்.

நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் உள்ள தனியார் விடுதியில் இலங்கை தமிழர்கள் தங்கி இருப்பதாக நெல்லை மாவட்ட கியூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. பொலிஸார் அங்கு விரைந்து சென்று விசா ரித்தனர். அப்போது அங்கு இலங்கையைச் சேர்ந்த 39 ஆண்களும் 9 பெண்களும் 5 குழந்தைகளும் இருந்தனர். இவர்கள் இந் தியா வருவதற்கு விசா பெற்று இருந்தனர். கடவுச்சீட்டு வைத்து உள்ளனர்.

அவர்களில் சிலர் கடவுச்சீட்டு வைத் திருக்கவில்லை. இது குறித்து பொலிஸார் கேட்டபோது சென்னையில் இருப்பதாக கூறி னார்கள். உடனே பொலிஸார் சென்னைக்கு தகவல் கொடுத்து விசாரணை நடத்தினார் கள்.

விசாரணையில் அவர்கள் தமிழகத்தில் பல்வேறு இடங்களுக்கு சென்று விட்டு 2 நாட் களுக்கு முன்பு குற்றாலம் வந்தது தெரிய வந்தது. இவர்களுடன் சென்னையில் வசித்து வரும் சந்திரகாந்தன் (வயது 38) என்பவரும் இருந்தார். இவர் கடந்த ஆண்டு இலங்கை யில் இருந்து வந்து சென்னையில் தங்கி இருந்து வருகிறார்.

அவரிடம் விசாரணை நடத்திய போது மற்ற 52 பேரையும் வேறு நாட்டுக்கு அழைத் துச் செல்ல பணம் வசூலித்ததையும் பொலி ஸார் கண்டு பிடித்தனர்.

எனவே இலங்கைத் தமிழர்களை வெளி நாட்டுக்கு அழைத்துச் செல்ல இருந்தார் என் றும் இவர்களை ஏமாற்றும் நோக்கத்தில் சந் திரகாந்தன் ஈடுபட்டு இருப்பதாகவும் கூறி குற் றாலம் பொலிஸில் ஒப்படைத்தனர்.

கைதான சந்திரகாந்தனை பொலிஸார் செங்கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். மற்ற 52 பேரையும் மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பி வைத்தனர். (ஸ்ரீ-2)

# அரசாங்கத்திலுள்ள சில கட்சிகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்வதைத் தவிர்க்கத் தீர்மானம்?

(கொழும்பு)

அரசாங்கத்திலுள்ள சில கட்சிகள் புதிய அரசியலமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவாக நடத்தப்படும் வாக்கெடுப்பில் கலந்துகொள் வதைத் தவிர்க்கத் தீர்மானித்திருப்பதாக தெரியவந்துள்ளதென ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி யின் கொறடாவுமான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புத் திருத்தம் சம்பந்தமாக கடைப்பிடிக்க வேண்டிய சாதாரண நடைமுறை களை அரசாங்கம் மீறியுள்ளதாகவும் இந்தப் புதிய திருத்தங்கள் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலம் சம்பந்தமான யோசனைகளை விட 17ஆவது அரசியலமைப்புச் திருத்தம் பல வீனமடையச் செய்யப்படுவது குறித்து கவ னத்தில் கொள்ள வேண்டும் எனவும் அமர துங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிப்பதைத் தடுப்பதற்காக கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வேலைத்திட்ட மொன்றை முன்வைத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அதிவேக கம்ப்யூட்டர்; சீனா தயாரித்துள்ளது

(பீஜிங்)

சீனாவின் தேசிய பாதுகாப்பு தொழில் நுட்பப்பிரிவு பல்கலைக்கழகம் ஒரு செக் கனில் ஆயிரம் டிரில்லியன் செயல்களைச் செய்து முடிக்க கூடிய அதிவேக கம்ப்யூட்ட ரைக் கண்டுபிடித்துள்ளது. தியான்கி -1 என பெயரிடப்பட்டுள்ள இந்தக் கம்ப்யூட்டர் இம் மாதம் பயன்பாட்டிற்கு வர உள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு முதலே இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

கடந்த ஆண்டின் உலகின் முதல் 500 சுப்பர் கம்ப்யூட்டர்களில் 50 ஆவது இடத்தை இந்த வகை கம்ப்யூட்டர் பிடித்துள்ளது. 1.3 மில்லியன் மக்கள் 88 ஆண்டுகளில் போட்டு வந்த கணக்குகளை இந்த வகைக் கம்ப் யூட்டர்கள் ஒரு செக்கனிலேயே போட்டு முடித்து விடும் என்பது இதன் முக்கிய அம்ச மாகும்.

மேலும் 27 மில்லியன் புத்தகங்களை இதனுள் அடக்கி விடலாம் என்பது கூடுதல் தகவல். இந்தக் கம்ப்யூட்டர் மூலம் அனி மேஷன், பயோ மெடிக்கல், வானுலகை ஆராய்வதற்கான வளர்ச்சி, செயற்கை கோள்களை கட்டுப்படுத்துதல், நீர்வள ஆதா ரங்களை கண்டறியப் பயன்படுத்தவும் முடியும். (ஸ்ரீ-2)

## 05.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1666 - லண்டனின் பெரும் தீ அணைந்தது. 10,000 கட்டிடங்கள் எரிந்து அழிந்தன. 16 பேர் கொல்லப்பட்டனர்.
- 1698 - ரஷ்ய பேரரசன் முதலாம் பீட்டர் தாடி வைத்திருப்பவர்களுக்கு வரி அறவிட உத்தரவிட்டான்.
- 1799 - பாஞ்சாலங்குறிச்சியை மேஜர் பானர்மேன் தலைமையிலான படை முற்றுகையிட்டது.
- 1800 - மோல்டா பிரித்தானியாவினால் பிடிக்கப்பட்டது.
- 1839 - முதலாவது ஓப்பியம் போர் சீனாவில் ஆரம்பமானது.
- 1880 - ரஷ்யாவில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உலகின் முதலாவது மின்சார டிராம் (Tram) வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.
- 1881 - மிச்சிகனில் இடம்பெற்ற தீயினால் மில்லியன் ஏக்கர்கள் வரை சேதமடைந்தது. 282 பேர் கொல்லப்பட்டனர்.
- 1882 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தொழிலாளர் தினம் பேரணி நியூயோர்க் நகரில் இடம் பெற்றது.
- 1887 - இங்கிலாந்தில் எக்செட்டர் நகரில் நாடக அரங்கில் தீப்பிடித்ததில் 186 பேர் கொல்லப்பட்டனர்.
- 1902 - சாவகச்சேரிக்கும் பளைக்கும் இடையில் 14மைல் நீளமான தொட ருந்து பாதை திறக்கப்பட்டது.
- 1905 - ரஷ்ய - ஜப்பானியப் போர்: அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டின் அமைதி முயற்சியை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் அமைதி உடன்பாடு நியூ ஹாம்ப்ஷயரில் எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பாரிசின் வடகிழக்கே பிரெஞ்சுப் படைகள் ஜெர்மனியப் படைகளைத் தாக்கி அவர்களை வென்றனர்.
- 1932 - பிரெஞ்சு மேல் வோல்ட்டா பிளவடைந்து ஐவரி கோஸ்ட், பிரெஞ்சு, சூடான், நைஜர் என மூன்று தனிநாடுகளானது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா போரில் தனது நடு நிலையை அறிவித்தது.
- 1961 -அணிசேரா நாடுகளின் முதலாவது மாநாடு பெல்கிறேட்டில் இடம் பெற்றது.
- 1969 - மை லாய் படுகொலைகள்: அமெரிக்க இராணுவ லெப்.வில்லியம்கலி 109 வியட்நாமிய பொதுமக்களைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டான்.
- 1972 - ஜெர்மனியில் மியூனிக்கில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கு பற்றிய இஸ்ரேலிய வீரர்களின் மீது பாலஸ்தீனத் தீவிரவாதி கள் தாக்குதல் நடத்தியதில் 17 பேர் கொல்லப்பட்டனர்.
- 1977 - வொயேஜர் 1 விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1978 - காம்ப் டேவிட் ஒப்பந்தம்: இஸ்ரேலியப் பிரதமர் பெகினுக்கும் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்துக்கும் இடையில் மேரிலாந்தில் அமைதி ஒப்பந்த மாநாடு ஆரம்பமானது.
- 1980 - உலகின் மிக நீளமான நெடுஞ்சாலைச் சுரங்கமான கோதார்ட் சாலைச் சுரங்கம் (16.224 கிமீ) சுவிற்ஸர்லாந்தில் திறக்கப்பட்டது.
- 1986 - அமெரிக்க பான் ஆம் விமானம் 358 பேருடன் கராச்சியில் கடத்தப்பட்டது
- 2005 - சுமாத்ராவில் பயணிகள் விமானம் ஒன்று தரையில் மோதியதில் தரையில் இருந்த 39 பேர் உட்பட மொத்தம் 143 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1872 - வ.உ.சிதம்பரம் பிள்ளை, விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1938)
- 1888 - சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் (இ. 1975)
- 1945 - மு.மேத்தா, கவிஞர்
- 1950 - வீரசிங்கம் துருவசங்கரி, இலங்கையைச் சேர்ந்த அறிவியலாளரும் கண்டுபிடிப்பாளரும் (இ. 2006)

### இறப்புகள்

- 1997 - அன்னை தெரேசா, (பி. 1910)

### சிறப்பு நாள்

இந்தியா - ஆசிரியர் தினம்



1990 - மட்டக் களப்பு வந்தாறு மூலைப் பல் கலைக்கழகத் தில் அகதி களாகத் தங்கி யிருந்த 158 தமி ழர்கள் இலங்கை இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்டனர்.

# நீயும் நானும்

திரை விமர்சனம்

புகழ்பெற்ற ரெசிடெண்ட் பள்ளிக்கு நடன ஆசிரியராக வருகிறார் சஞ்சீவ். வந்த இடத்தில் ஏழை சிறுவன் ரின்சனோடு நட்பு ஏற்படுகிறது. அவனது படிப்பு ஆர்வம் அவரை ஆச்சர்யப்படுத்த மானேஜ்மெண்ட்டிடம் பேசி, தான் வேலை பார்க்கும் பள்ளியிலேயே சேர்க்கிறார். பள்ளி சேர்மனின் மகன் மாஸ்டர் சச்சினுக்கு நடனத்தில் ஆர்வம். இந்த நிலையில் ரின்சனின் அம்மா இருதய நோயில் படுக்கையில் விழ, அவரைக் காப்பாற்ற 6 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது.

அப்போது வரும் தொலைக்காட்சி நடனப் போட்டியில் ஜெயித்தால் 6 இலட்சம் கிடைக்கும். இதனால் ரின்சன் சஞ்சீவிடம் நடனம் கற்று அந்தப் போட்டியில் கலந்துகொள்ள முடிவு செய்கிறான். ஆனால் பள்ளி சேர்மனோ தன் மகன் சச்சின் தான் போட்டியில் பங்கேற்க வேண்டும் என்கிறார். ஏழை மாணவனுக்கு உதவுவதற்காக பள்ளியிலிருந்து விலகி ரின்சனுக்கும் அவனது குப்பத்து மாணவர்களுக்கும் டான்ஸ் சொல்லிக் கொடுத்து போட்டியில் கலந்துகொள்ள வைக்கிறார். யார் வெற்றி பெற்றார்கள் என்பது படத்தின் முடிவு.

சஞ்சீவ் கல்லூரி முதலாமாண்டு மாணவன் தோற்றத்தில் இருந்தாலும் நடன ஆசிரியர் கரக்டருக்கு நடிப்பால் மெருகூட்டுகிறார். ஏழை மாணவனுக்காக அவர் வாதாடும், போராடும் காட்சிகளில் நடிப்பிலும், நடனக் காட்சிகளிலும் திறமை காட்டுகிறார். ஹீரோயின் சேதனா பாடல் காட்சிகள் தவிர மற்ற காட்சிகளில் கவர்ச்சி வருகை கொடுக்கிறார். ஹீரோயினின் முறைப்பையனாக வரும் வதன் சைக்கோத்தனமாக கத்தியே எரிச்சலூட்டுகிறார்.








படத்தின் நிஜமான ஹீரோ மாஸ்டர் ரின்சன். அம்மாவுக்காகத் துடிக்கும் நடிப்பிலும் சரி, துள்ளலான நடனத்திலும் சரி ஆச்சர்யப்பட வைக்கிறார். அவனுக்குப் போட்டியாளராக வரும் மாஸ்டர் சச்சினும் குறை வைக்கவில்லை. சிங்கமுத்து சிரிக்க வைக்க முயற்சிக்கிறார்.


பள்ளி சேர்மனாக வரும் சம்பத் நல்லவரா, கெட்டவரா என்பதை கடைசி வரை புரிந்து கொள்ள முடியவில்லை. ஒளிப்பதிவும் இசையும் பரவாயில்லை ரகம். மிகப் பெரிய பள்ளி. அதில் நேர்மையும் துணிச்சலும் மிக்க நடன ஆசிரியரின் நுழைவு, ஆர்வமுள்ள மாணவர்களை உற்சாகப்படுத்துதல், ஏழை மாணவன் பணக்காரப் பள்ளியில் படிக்க வருதல் என்று ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்களை தூண்டிவிட்டு, பின்பு அம்மாவுக்கு நோய், சத்திர சிகிச்சை என்ற வழக்கமான ரூட்டிலேயே சென்று சலிப்பூட்டுகிறது திரைக்கதை.

குப்பத்து மாணவர்களை நடனப் போட்டிக்கு தயார் செய்வதிலும், வருடக் கணக்காக படிக்க வேண்டிய நடனத்தை மாஸ்டர் ரின்சன் ஒரு நாளில் கற்றுக் கொள்வதிலும் லொஜிக் இல்லை. யதார்த்தம் என்ற பெயரில் குமட்டல் சமாசாரங்களை திணித்திருப்பதை தவிர்த்திருக்கலாம்.

நல்ல படத்தை தர ஆசைப்பட்டிருக்கும் இயக்குநர் எஸ்.வி.சோலைராஜா அதற்காக கடுமையாக உழைக்கவில்லை.




## மீண்டும் படம் எடுக்கிறார் பாரதிராஜா



சிறிது காலம் டைரக்ஷனில் இருநது ஒதுங்கி இருந்த டைரக்டர் பாரதிராஜா, தற்போது மீண்டும் தனது டைரக்ஷன் பணிக்கு திரும்பி உள்ளார். பொம்மலாட்டம் படத்திற்கு பின்னர் சிறிய இடைவேளையைத் தொடர்ந்து தனது புதுப்பட வேலையல் பாரதிராஜா மும்முரமாக உள்ளார். முக்கிய வேடத்தில் தான் நடித்து, இயக்கும் இந்தப் புதிய படத்திற்கு "தெக்கிழக்கு சீமையிலே" என பெயரிட்டுள்ளார்.

இப்படத்தின் மற்றுமொரு ஹைலைட் என்னவென்றால், இயக்குநர்கள் அமீர், சீமான் ஆகியோர் பாரதிராஜாவின் மகன்களாக இப்படத்தில் நடிக்கவுள்ளனர். தென்தமிழக கிராமங்களை மாறுபட்ட கோணங்களில் காட்டும் படமாக தென்கிழக்கு சீமையிலே இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது. இப்படத்திற்கு இசையமைக்க வைக்க ஹரிஸ் ஜெயராஜ்டன் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாக உள்ளது.

## விஜய்யின் புதிய படத்தின் பெயர் ராஸ்கல்!


பாலிவுட்டில் வெளியாகி வசூலை வாரிக்குவித்த 3 இடியட்ஸ் படத்தை தமிழில் எடுக்கப் போவதாக தகவல் வெளியான நாள் முதல் தினம் தினம் புதுப்புது செய்திகள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன. முதலில் விஜய் - அஜித் - மாதவன் சேர்ந்து நடிப்பதாகக் கூறப்பட்டது. பின்னர் விஜய் -சித்தார்த் -சிம்பு எனக் கூறப்பட்டது. விஜய் -மாதவன் - சிம்பு ஆகியோர் சேர்ந்து நடிக்கிறார்கள் என்ற தகவல் வெளியானது. தனது கரக்டருக்கு முக்கியத்துவம் கொடுத்தால்தான் நடிப்பேன் என்று சிம்பு கூறியதாகவும் செய்தி வெளியானது.

இப்படி மாறி மாறி பல செய்திகள் உலாவந்து கொண்டிருந்தபோதிலும் விஜய் நடிப்பது மட்டும் உறுதியாகக் கூறப்பட்டது. இப்போது வந்திருக்கும் புதிய தகவல் படத்தில் விஜய்க்கு ஜோடியாக தமன்னா நடிக்கிறார் என்பதும். நவம்பர் முதல் வாரத்தில் 3 இடியட்ஸின் தமிழ் ரீமேக் பட சூட்டிங் தொடங்குகிறது என்பதும் தான். இன்னொரு லேட்டஸ்ட் தகவல் படத்திற்கு ராஸ்கல் எனப் பெயர் சூட்டியிருக்கிறாராம் டைரக்டர் ஷங்கர். அடுத்தடுத்து படு பிஸியாக நடித்துக் கொண்டிருக்கும் விஜய் தீபாவளி விருந்தாக காவலனையும், பொங்கல் விருந்தாக வேலாயுதத் தையும் திரைக்குக் கொண்டு வர திட்டமிட்டி ருக்கிறார்.

இதற்கிடையில் சீமான் இயக்கத்தில் விஜய் நடிப்பதாக இருந்த பகலவன் படத்துக்கான சூட்டிங்கும் விரைவில் தொடங்கும் என எதிர்பார்க் கப்படுகிறது. இப்படத்தின் திரைக் கதை வசனத்தை சிறைக் குள்ளேயே எழுதி முடித்துவிட்டார் என்பது வியப்பூட்டும் தகவல்.



## விஜய்யின் இயக்கத்தில் விக்ரமின் அடுத்தபடம் "ரா...ரா..."



டைரக்டர் விஜய் இயக்கத்தில் விக்ரம் நடிக்கும் அடுத்த படத்தின் பெயர் ரா...ரா.. இந்த படத்தின் சூட்டிங் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. விக்ரமின் விருப்பப்படி இப்படத்தை விரைவில் முடித்து வெளியிடவும் விஜய் திட்டமிட்டுள்ளார்.

ஒரே செட்யூல்டில் இந்த படத்தை முடிக்க இருப்பதாகவும் கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மோகன் நடராஜன் இப் படத்தை தயாரிக்க உள்ளார். விஜயின் சமீபத்திய தயாரிப்பான மதராசப்பட்டிணம் சுப்பர் ஹிட்டானதை தொடர்ந்து அவரோடு பணியாற்றிய விக்ரம் உள்ளிட்ட கோலிவுட் முன்னணி ஹீரோக்கள் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## ஜீவாவின் அடுத்த படம் வந்தான் வென்றான்!

நான் கடவுள் படத்தை தயாரித்த, கே.எஸ்.சீனிவாசனின் வாசன் "விஷ்வல் வென்சர்ஸ் நிறுவனம்' ஆர்யா - நயன்தாரா ஜோடி நடித்துள்ள பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தை எடுத்து முடித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து அந்நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் "வந்தான் வென்றான்"



இதில் நடிகர் ஜீவா நாயகனாக நடிக்கிறார். ஆடுகளம் படத்தில் தனுஷ் ஜோடியாக நடித்து வரும் டாப்சி நாயிகியாக நடிக்கிறார். காமெடிக்கு சந்தானம். 'ஜெயம்கொண்டான், கண்டேன் காதலை படங்களை இயக்கிய டைரக்டர் ஆர். கண்ணன் கதை, திரைக்கதை அமைத்து படத்தை இயக்குகிறார்.

# பொலிஸாரைக் கடத்திய முக்கியபுள்ளி கைது; 3 பொலிஸார் உயிருடன் மீட்கப்படுவார்களா?

(பாட்னா)

பீகார் மாநிலம் ஜம்முயி மாவட்டத்தில் அதிரடிப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் மாவோயிஸ்ட் முக்கிய தலைவன் பிரமோத் கைது செய்யப்பட்டான். கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று லக்கிசராய் மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் 4 பொலிஸ்காரர்களைக் கடத்தினர். இந்தக் கடத்தலுக்கு மூளையாக செயற்பட்டவன் பிரமோத் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று மாலை முதல்வர் நிதீஷ்குமார் அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டியுள்ளார். காலம் தாழ்ந்து நடக்கும் இக்கூட்டத்தால் எவ்வித பயனும் இருக்காது என முன்னாள் முதல்வரும் ராஷ்டிரிய ஜனதாதள கட்சி தலைவருமான லாலு பிரசாத் யாதவ் கூறியுள்ளார்.

இதற்கிடையில் பாதுகாப்பு படையினர் கடத்தி செல்லப்பட்ட பொலிஸாரை தேடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பிணைக் கைதியாக பிடித்துச் சென்ற பொலிஸாரை தீவிரவாதிகள் கொன்றது அவர்கள் மீதான நம்பகத்தன்மையை பாதிக்கும் என சமூக ஆர்வலர்கள் மேதா பட்கர் மற்றும் சுவாமி அக்னிவேஷ் ஆகியோர் கூறியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கூறுகையில், நாட்டில் பயங்கரவாதம் அதிகரிக்க மத்திய மாநில அரசுகளும் தீவிரவாதிகளுமே காரணம். பிணைக் கைதியாக பிடித்துச் சென்ற பொலிஸ்காரர் ஒருவரை தீவிரவாதிகள் கொடூரமாக கொன்றிருப்பதன் மூலம் அவர்கள் மீதான நம்பகத்தன்மை போய்விட்டது. அதை அவர்கள் மீட்பது கடினம்.

நடந்தசம்பவம்மிகவும் துரதிர்ஷ்டவசமானது. நல்ல சிந்தனை கொண்ட யாரும் இந்தப்படுகொலையை ஆதரிக்கமாட்டார்கள். பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக மாவோயிஸ்டுகள் பலமுறை கூறினர். இருந்தும் அவற்றை எல்லாம் அரசு கண்டுகொள்ளவில்லை. பொலிஸார் மற்றும் துணை இராணுவப் படையில் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் தான் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இரையாகின்றனர்.

தீவிரவாதிகள் தயவு காட்டினால் தான் பொலிஸார் வாழ முடியும் என்ற சூழ் நிலையை மத்திய மாநில அரசுகள் உருவாக்கி விட்டன. இது போன்ற படுகொலைகள் தொடர்வது தடுக்கப்படவேண்டுமெனில் தீவிரவாதி களும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் .அரசு தொடர்ந்து அமைதியாக இருந்தால் சாதாரண மக்கள் தான் பாதிக்கப்படுவர் என அவர்கள் கூறினர். (ஸ்ரீ-2)

## மாணவர்களை அடிக்கக் கூடாது ஆசிரியர்களுக்கு இந்திய பிரதமர் அறிவுரை

மாணவர்களை அடித்து அச்சுறுத்தும் வகையான கண்டிப்புகள் தவறானது என்று ஆசிரியர்களுக்கு பிரதமர் மன்மோகன்சிங் அறிவுறுத்தியுள்ளார்.

இவ் ஆண்டிற்கான ஆசிரியர் தினத்தையொட்டி நல்லா சிரியர் விருதுகள் வழங்கும் விழா டில்லியில் நேற்று நடைபெற்றது. அப்போது உரையாற்றிய மன்மோகன்சிங், மாணவர்களிடம் ஜாதி, மத, இன பாகுபாடு களை ஆசிரியர்கள் காட்டக்கூடாது என்றும் மாணவர்களை அடித்து துன்புறுத்தவோ அவர்களது மன உளைச்சலைப் பாதிக்கும் விதத்தில் நடந்து கொள்ளவோ கூடாது என்றும் கேட்டுக்கொண் டார் .ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் மாண வர்கள் கடைப்பிடிக்க ஒவ்வொரு குழந்தையின் மீதும் ஆசிரியர்கள் கவனம் வைக்க வேண்டும் என்று அவர் கூறினார். மாணவர்களின் தேவையை அறிந்து உதவ முன்வரும் போதும் அவர்களை அச்சுறுத்தி அதிகாரம் செய் யும் மனப்பான்மை மாறிவிடும் என்று மன்மோகன்சிங் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# சபரிமலை ஐயப்பன் கோவில் ஆண்டு முழுவதும் திறக்கப்படுமா?

(கொச்சி)

சபரிமலை ஐயப்பன் கோவிலை ஆண்டு முழுவதும் திறக்கலாமா? என்பது குறித்து நிபுணர் குழுவின் கருத்தைக் கேட்க கேரள மேல் நிதி மன்றம் உத்தரவிட்டது.

சபரிமலை ஐயப்பன் கோவில் தற்போது மண்டல பூஜை காலத்திலும் மகர விளக்கு பூஜை காலத்திலும் பக்தர்கள் தரிசனத்துக்கு திறக்கப்படுகிறது. இந்த இரு பருவ காலம் தவிர ஒவ்வொரு மாதத்திலும் தொடக்கத்தில் சில நாட்கள் மாதாந்திர பூஜைக்காக திறக்கப்படுகிறது.

இந்தக் கோவிலை ஆண்டுதோறும் திறந்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இது தொடர்பான வழக்கும் கொச்சியில் உள்ள கேரள மேல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

நேற்று முன்தினம் நீதிபதிகள் பி.ராதாகிருஷ்ணன்,பி.பவதாசன் ஆகியோர் அடங்கிய குழுவினர் முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், சபரிமலை ஐயப்பன் கோவிலை ஆண்டு முழுவதும் திறக்கலாமா என்பது குறித்து நிபுணர் குழுவின் கருத்தை கேட்க வேண்டும் என்று கோவிலை நிர்வகித்து வரும் திருவாங்கூர் தேவஸ்வம் சபைக்கு உத்தரவிட்டனர்.

இதற்காக வழங்கப்பட்ட உத்தரவு வருமாறு,

சபரிமலை ஐயப்பன் கோவில் அடர்ந்த காட்டுக்குள் இருப்பதால் முன்பு பருவ காலத்தில் மட்டும் திறக்கப்பட்டு வந்தது. தற்போது நிலைமை மாறி விட்டது. ஆகவே ஆண்டு முழுவதும் கோவிலைத் திறந்து வைப்பது குறித்து நிபுணர் குழுவின் கருத்தை தேவஸ்வம் சபை கேட்க வேண்டும்.

கோவிலின் புனித 18 ஆம் படியை அகலப்படுத்தலாமா? என்பது பற்றியும் நிபுணர்



குழுவின் கருத்தை தேவஸ்வம் சபை கேட்க வேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் தங்கள் உத்தரவில் கூறியுள்ளனர். முன்னதாக தேவஸ்வம் சபையின் தலைமை பொறியாளர் இது தொடர்பாக நீதிமன்றத்தில் ஒரு அறிக்கை தாக்கல் செய்திருந்தார்.

அதில் 18 ஆம் படியை அகலப்படுத்துவது வாஸ்து சாஸ்திரத்துக்கும் மரபுக்கும் எதிரானது என்று அறிக்கை தாக்கல் செய்திருந்தார். அந்த அறிக்கையை தள்ளு படி செய்த நீதிபதிகள் இது பற்றியும் நிபுணர் குழுவின் கருத்தை கேட்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




## இலங்கையில் இந்தியா முன்னெடுத்துவரும் வளர்ச்சி பணிகளைக் கண்காணிக்க மேம்பாட்டு ஒத்துழைப்புக்குழு

இலங்கையில், இந்தியா மேற்கொண்டு வரும் வளர்ச்சிப் பணிகளை கண்காணிக்கும் நோக்கில் மேம்பாட்டு ஒத்துழைப்புக் குழு அமைக்கப்படவுள்ளதாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக வீடு கட்டிக் கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை இந்தியா மேற்கொள்கிறது.

4 நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் கடந்த 02ஆம் திகதி அன்று டில்லி திரும்பினார்.

நாடு திரும்பும் முன்னர் இந்தியா மேற்கொள்ளும் வளர்ச்சிப் பணிகளைக் கண்காணிக்கவும் முறையாக நடைமுறைப் படுத்தவும் மேம்பாட்டு ஒத்துழைப்புக் குழு அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில் இந்தக் குழு விரைவில் அமைக்கப்படுமென இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள், புகையிரதப் பாதைகள், அனல் மின்நிலையம் உள்ளிட்ட வளர்ச்சிப்பணிகளை இந்தியா மேற்கொள்ள இருக்கிறது. இப்பணிகள் அனைத்தையும் மேம்பாட்டு ஒத்துழைப்புக் குழு கண்காணிக்கும். (ஸ்ரீ-2)




நான்காவது முறையாக எவ்வித போட்டியுமின்றி காங்கிரஸ் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட சோனியாகாந்தி டில்லியிலுள்ள தேர்தல் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழுடன் நிற்பதை படத்தில் காணலாம்.

## கச்சதீவு இந்தியாவின் ஒருபகுதி; பா.ம.க.தலைவர் ராமதாஸ் தெரிவிப்பு



கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதி என பா.ம.க.தலைவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். சென்னை மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் செயற்குழு கூட்டம் மற்றும் நிர்வாகிகள் அறிமுக கூட்டத்தை தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்பேட்டி குறித்த விபரம் வருமாறு,

கே-கச்சதீவை திரும்பபெறமுடியாது என்று மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியுள்ளாரே?

ப-அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. கச்சதீவு இந்தியாவின் ஒரு பகுதி.

கே-பா.ம.க.தலைமையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா?

ப-மக்கள் மாற்றத்தை விரும்பினால் நாங் கள் தயாராக இருக்கிறோம். மாற்று அணிக்கு தலைமை ஏற்கவும் தயாராக இருக்கிறோம்.

கே-3மாதங்களுக்கு முன்பு.தி.மு.க. உடன் கூட்டணி பேசினீர்கள். இப்போது தி.மு.க.வை கடுமையாக விமர்சனம் செய்வதற்கு என்ன காரணம்?

ப-பொதுவாக எதிர்க்கட்சிகள் யாரை விமர்சனம் செய்வார்கள். ஆளும் கட்சியைத் தான் விமர்சனம் செய்வார்கள். ஆளும் கட்சி குறைகளைத் தான் சுட்டிக்காட்டுவார்கள். எதிர்க்கட்சிகள் சொல்லும் குறைகளை கேட்டு திருத்திக் கொள்வது தான் ஆளும் கட்சியின் கடமை.

கே-தி.மு.க.வுடன் கூட்டணி ஏற்பட வாய்ப்புள்ளதா?

ப-இப்போது அது பற்றி எந்த முடிவும் செய்யவில்லை.

கே-மத்திய அரசு வெளியுறவுத்துறை செயலாளர் நிருபமாராவ் இலங்கை பயணம் பற்றி உங்கள் கருத்து என்ன?

ப-இது எந்த வகையிலும் பயனளிக்காது. (ஸ்ரீ-2)

# ஸ்டெதஸ்கோப் வேணாம்... ஐபோன் மட்டுமே போதும்


டாக்டருக்கான பிரதான அடையாளம் வெள்ளை கோட் மற்றும் கழுத்தில் தொங்கும் ஸ்டெதஸ்கோப். இந்த 2ஆவது அடையாளம் மாறப்போகிறது. அதற்குப் பதிலாக ஐபோனும் கையுமாக இனி டாக்டர்களை பார்க்கலாம்.

இன்டர்நெட் இ&மெயில், பக்ஸ் அனுப்பும் வசதிகள் கொண்ட ஸ்மார்ட் போன்களுக்கு தற்போது அதிக வரவேற்பு உள்ளது. இத்தகைய போன்களை மருத்துவத்துறையில் பயன்படுத்துவது தொடர்பாக லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் பீட்டர் பென்ட்லி தலைமையில் ஆய்வு நடத்தி அதில் வெற்றியும் பெற்றுள்ளனர்.

ஸ்டெதஸ்கோப்பாகப் பயன்படும் ஐபோனுக்கு 'ஐ& ஸ்டெதஸ்கோப்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அப்பிள் நிறுவனத்தின் தயாரிப்பான ஐபோன் பல்வேறு வகைகளில் பயன்படுவதால் அதில் அதிக சக்தி வாய்ந்த கமரா, சென்சார்கள், மைக் போன்ற கருவிகள் உள்ளன.

இவற்றைப் பயன்படுத்தியே நோயாளியின் இதயத்துடிப்பை துல்லியமாகக் கண்டறிய முடியும்.

ஐபோனை ஸ்டெதஸ்கோப்பாக பயன்படுத்துவதற்கான 'டிரயல்' சொப்ட்வெயர் அப்பிள் நிறுவனத்தின் இணையத்தளத்தில் இருந்து இதுவரை 30 இலட்சம் டாக்டர்கள் டவுண்லோட் செய்துள்ளனர். சாதாரண





மக்களும் செல்போனை பயன்படுத்தியே இதயத்துடிப்பு பற்றி தெரிந்துகொள் வதற்கு ஏற்ப விரைவில் மாற்றங்கள் செய் யப்படும் என்கிறது அப்பிள் நிறுவனம். மருத் துவம் தொடர்பாக 6 ஆயிரம் பயன்பாடு களுக்கு ஸ்மார்ட் போன்கள் இப்போது பயன் படுகின்றன.

மருத்துவ சேவைகளுக்காக மூன்றில் ஒரு பங்கு டாக்டர்கள் ஸ்மார்ட் போன் களைப் பயன்படுத்துகின்றனர் என்று தகவல் கூறுகின்றனர்.




# சோர்வுக்கு 'யோகா' நல்லது!

சோர்ந்து போய் இருக் கிறீர்களா? அப்படியானால் வேறு எந்த உடற்பயிற்சியையும் விட "யோகா" நல்லது, அது அதிக பலனளிக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். "யோகா" வின் ஆக்கபூர்வமான தாக்கம், உற்சாகத்தைக் கூட்டுகிறது. மனக் கவலை, படபடப்பைப் போக்குகிறது என்கிறார்கள். நடைப் பயிற்சியை விட "யோகா" செய்வது நல்லது என்பது அவர்கள் கருத்து.

பாஸ்டன் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி ஆய்வாளர்கள் மேற்கொண்ட முடிவைத் தெரிவித்திருக்கின்றனர். அவர்கள், யோகாவில் ஈடு படுபவர்கள், நடைப்பயிற்சியில் ஈடுபடு பவர்களின் மூளைச் செயல்பாட்டு நிலை யை ஒப்பிட்டனர்.

அதற்கென்று, ஒரு குழுவினர் வாரத்துக்கு மூன்று முறை "யோகா" பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். மற்றொரு குழுவினர் அதே காலகட்டத்தில் அதே கால அளவுக்கு நடைப்பயிற்சி மேற்கொள்ளச் செய்யப்பட்டனர். யோகாவில் ஈடுபட்ட வர்கள் மனநிலையில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது.

# நிலவு சுருங்குகிறது!


நிலவுப் பரப்பு



நம்மை பெரிதும் கவர்ந்த பூமியின் துணைக் கோள், நிலா. கவிஞர்கள் நிலவைப் புகழ்ந்த அளவுக்கு வேறு எதையும் புகழ்ந்திருக்க மாட்டார்கள்.

தற்போது நிலவைப் பற்றி ஒரு புதிய தகவலைக் கூறியிருக்கிறார்கள் கோள் ஆராய்ச்சியாளர்கள். அதாவது, நிலா சுருங்கிக் கொண்டிருக்கிறது என்கிறார்கள். அதற்கு ஆதாரமாக நிலவுப் பரப்பில் காண ப்படும் விரிசல் களை அவர்கள் சுட்டிக் காட்டு கிறார்கள். ஒரு கோளா னது குளிரும் போதோ, சுருங்கும் போதோ மட்டுமே அம் மாதிரியான விரிசல் கள் ஏற்படும்.

ஆனால் நிலா சுருங்குவது குறித்து அச்சப்படத் தேவையில்லை, அது மிக மிக மெதுவாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று ஆறுதலும் அளிக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அவர்கள் தாங்கள் செய்துள்ள ஆய்வின்படி நிலவானது சிறிது சிறிதாக காற்று இறங்கும் பலூனைப் போல சுருங்குகிறது. அதன் உட்பகுதி குளிர்வதால் இந்தச் சுருக்கம் ஏற்படுகிறது என்று தெரிவிக்கின்றனர். அந்தச் சுருக்கம், நிலவின் சுற்றளவை 100 மீற்றர் அளவுக்குக் குறைத் திருக்கிறது என்று கூறப்படுகிறது.

''நிலவின் உட்பகுதி குளிரும்போது அது சுருங்குகிறது. அப் போது அதன் நிறை க்கு ஏற்ப அதன் வெளி அடுக்கும் அட்ஜஸ்ட் ஆக வேண்டியிருக்கிறது. அதனால் தான் வெளிப்பகுதியில் விரிசல்கள் ஏற்படுகின்றன" என்று ஸ்மித் சான்சியன் நிறுவன முன்னணி விஞ்ஞானி டாக்டர் தாமஸ் வாட்டர்ஸ் தெரிவிக்கிறார்.

நிலவின் பீடப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் அந்த விரிசல்களை விண்வெளியில் இருந்து அனுப்பப் பட்டிருக்கும் காட்சிகள் மூலம் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கிறார்கள். இம்மாதிரியான விரிசல்கள், அப்பல்லோ விண்கலம் 1970 ஆம் ஆண்டில் எடுத்து அனுப்பிய படங்கள் மூலம் முதன்முதலாக அறியப்பட் டன. இப்படி நிலவு சுருங்குவதால் அது இல்லாமலே போய்விடப் போவ தில்லை, பூமிக்கும் எவ்விதப் பாதிப் பையும் ஏற்படுத்தாது என்று விஞ் ஞானிகள் நிம்மதி அளிக்கின்றனர்.

# உருளைக்கிழங்குக்கு "கரண்ட்ஷாக்"

உருளைக்கிழங்கு மீது "அல்ட்ரா சவுண்ட்", அதிகஅலைவரிசையுள்ள ஒலி அலைகளைப் பாய்ச்சினால் அல்லது அதற்கு "எலக்ட்ரி ஷொக்" கொடுத்தால் அதில் ஆரோக்கியம் அளிக்கும் ''அன்டி ஒக்சிடன்ட்களின் அளவு'' அதிகரிக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

உருளைக்கிழங்கின் ''அன்டி ஒக்சிடன்ட்களின்'' அளவை அதிகரிப்பதற்கு எளிமையான, செலவு குறைந்த வழிகள் இவை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த ஆராய்ச்சிக்குத் தலைமை தாங்கியவர், ஜப்பான் ஒபிஹிரோ பல்கலைக்கழகத்தின் கஸுநோரி ஹிரோனாக்கா. அவர் கூறுகையில்,



''உருளைக்கிழங்குகளின் மீது 5 முதல் 30 நிமிடங்களுக்கு மின்சாரம் அல்லது ''அல்ட்ரா சவுண்டை'' பாய்ச்சினால் அவற்றில் ''அன்டி ஒக்சிடன்ட்களின்'' அளவு 50 சதவீதம் அளவுக்கு அதிகரிப் பதை நாங்கள் கண்டுபிடித் திருக்கிறோம். கூடும் ''அன்டி ஒக்சிடன்ட்களின்'' பீனால்கள், குளோரோஜெனிக் அமிலம் போன்றவையும் அடங்கும் என்று தெரிவித்திருக்கிறார்.

# நட்சத்திரங்களுக்கும் நிறம் உண்டு

நட்சத்திரங்களுக்கும் நிறம் உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா? எல்லா நட்சத்திரங்களுக்கும் நிறம் உண்டு. அந்தந்த நட்சத்திரத்தின் மேற்பரப்பில் காணப்படும் வெப்பத்தைப் பொறுத்து நிறங்கள் மாறுபடுகின்றன. சில நட்சத்திரங்கள் குளிர்ச்சியாக இருக்கும். அவற்றின் புற வெப்பம் 3 ஆயிரம் டிகிரி செல்சியஸாக இருக்கும். அந்த வெப்பநிலை கொண்ட நட்சத்திரங்களின் நிறம் சிவப்பாக இருக்கும். மிகவும் சூடான நட்சத்திரங்களின் புறவெப்பம் 10 ஆயிரம் டிகிரிக்கு மேலும் காணப்படும். அது போன்ற வெப்பமுள்ள நட்சத்திரங்கள் நீல நிறத்தில் ஒளிரும்.

நாம் அன்றாடம் பார்க்கும் சூரியனும் ஒரு நட்சத்திரமே. இதன் புற வெப்பம் 5 ஆயிரம் டிகிரி செல்சியஸ் ஆகும்.

சூரியனின் நிறம் மஞ்சள் கலந்த வெள்ளை ஆகும். நட்சத்திரங்களின் நிறங்களை நம்மால் வெறுங் கண்ணில் காண முடியாது.


சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் மட்டுமே பார்க்க முடியும்.

> நெஞ்சில் கவலை நிதமும் பயிராக்கி
> அஞ்சி உயிர் வாழ்தல், அறியாமை.
> — பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தென்பகுதி மக்களின் வருகை துன்பம் தரக் கூடாது

யாழ்ப்பாணத்தை நோக்கி தென் பகுதியிலிருந்து வருகை தருகின்ற மக்கள் எதைத்தான் பார்க்கின்றார்கள்? இங்கு என்னதான் இருக்கிறது அவர்கள் பார்ப்பதற்கு? என்ற கேள்வி எம்மில் பலரிடம் ஏற்படுகின்றது.

இந்தக் கேள்விதான் எங்கள் பெருமைகளையும் வரலாற்றுச் சின்னங்களையும் சிதைப்பதற்கு மூல காரணம் என்பது உணரப்பட வேண்டும்.

எங்கள் மூதாதையர் பயன்படுத்திய வெற்றிலைத்தட்டம் கூட எங்கள் வாழ்வியல் பண்பாட்டின் அடையாளம் என்பது தெரியாமல் இருப்பதனால்தான்,ஒரு கிலோ செப்பு நாற்பது ரூபாய், பித்தளை முப்பது ரூபாய் என்று தராசில் நிறுத்து விற்றுத் தீர்க்கின்றோம்.

மிகப் பெறுமதியான பழைய காலத்துக் குத்து விளக்குகள் தூக்குத் தராசில் தொங்கிக் கொள்ள, சில்லறைக் காசுக்கு அவை விற்பனையாகும் வேதனையை யாரிடம் சொல்வது?

குத்துவிளக்கென்றால்,விளக்கேற்ற வேண்டும் இல்லையென்றால் அதனை வைத்திருந்து என்ன பயன் என்று நினைக்கும் எங்களிடம் கலைத்துவ பஞ்சமும் நிறையவே உண்டென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

வீட்டின் முன் பாகத்தில் துலக்கிய குத்து விளக்கை,கெண்டியை,வெற்றிலைத் தட்டத்தை வைப்பது கூட அழகுதான்.

தூண்டாமணி விளக்கை தூக்கி விடுவதில் கூட தெய்வீகத் தன்மை வெளிப்படுவதை உணர முடியும். இதைச் செய்கின்றபோதுதான் எங்கள் ஒவ்வொரு வீடுகளிலும் தமிழர்களின் வாழ்வியல் சிறப்பும் எங்கள் முன்னோர்களின் வாழ்வியல் அடையாளங்களும் பாதுகாக்கப்படும்.

அதேநேரம் எங்களிடம் இருக்கின்ற பொக்கிஷங்களை,வரலாற்றுப் பதிவுகளை பார்வையிடுவதில் நாமும் ஆர்வம் காட்டுவது கட்டாயமானதாகும். இதிலிருந்து நாம் விலகிக்கொள்ளும் போது அதற்கான உரிமைகோரல்களும் திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றுப் படைப்புகளும் புதிதாக தோற்றுவதை தடுக்க முடியாமல் போகும்.

இது விடயங்களில் நாம் கரிசனை கொள்ளும் அதேநேரம் தென்பகுதியில் இருந்து வருகின்ற மக்கள் இந்துக் கோயில்களில் வைத்து மாமிச உணவைப் புசிப்பதைப் பார்க்கும்போது வேதனை நெஞ்சை உடைக்கின்றது.

இவையெல்லாம் அறியாமல் செய்யப்படுபவையா அல்லது இது பௌத்த சிங்கள நாடு, இங்கு நாங்கள் நினைத்தால் எதுவும் செய்யலாம் என்ற நினைப்பா என்பது தெரியாமல் உள்ளது.

எதுவாயினும் தென்பகுதி மக்கள் தரையிலும் வெளியிலும் உணவு பரிமாறுவதைப் பார்க்கும் போது இந்த இயற்கையின் வனப்பை அவர்கள் அற்புதமாக அனுபவிக்கிறார்கள் என்ற மனநிலை ஒருபுறம்.

இவர்கள் உணவு பரிமாறுவதற்கு ஏற்றதாக பொது இடம் இல்லையே என்ற மனக்கவலை மறுபுறமாக இருக்கும் போது,

இந்து ஆலய வெளி மண்டபங்களில்–மண்டபங்களில்–வெளிவீதிச் சுவர் ஓரங்களில் வைத்து மாமிச உணவைப் புசிப்பது தெய்வீகத்திற்கு இழுக்கான செயலாகும்.

இத்தகைய செயல்களைக் கண்டு ஒவ்வொரு இந்துவும் கண்ணீர் வடித்தாலும் யாரிடம் சொல்வது,சொன்னால் நீதி கிடைக்கவா போகின்றது,எல்லாம் நடந்து முடியட்டும் என்னும் மனநிலையில் அவர்கள் மௌனம் சாதிக்கின்றனர்.

இந்த துன்ப நிலையை பொறுப்பானவர்கள் உணர்ந்து செயற்படுவது மிகவும் அவசியமானதாகும்.

# பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள 3 கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேற்றம்

## முருகேசு சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(பளை)

பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள இயக்கச்சி,முகாவில் , கோவில்வயல் ஆகிய பிரிவுகளில் விரைவில் மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பளை பிரதேச செயலர் பிரிவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

பளைப் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்களும் பற்றி இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் பிரதேசத்தின் உட்கட்டுமானப் பணிகள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

யுத்தத்தினால் மிகவும் பாதிப்படைந்த பிரதேசமாக பளைப் பிரதேச செயலர் பிரிவு உள்ளது.மீண்டும் இந்தப் பிரதேசத்தைக் கட்டியெழுப்பும் பணியில் முழு வீச்சுடன் அனைவரும் செயற்படவேண்டும்.

இதேவேளை பளைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்ற நடவடிக்கைகளைப் பற்றி விளக்கமளித்த பிரதேச செயலர் முகுந்தன்,காணியில்லாதோருக்கு காணி வழங்கும் பணியும் வீடமைப்புப் பணிக்கும் இன்று முக்கியமான தேவையாக உள்ளன எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது ,மீள்குடியேறிய மக்களுக்கு மேலும் கூரைத்தகடுகளும் சீமெந்துப் பொதிகளும் வழங்கப்படவுள்ளது என்றும் கூறினார்.இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் திணைக்களங்களின் தலைவர்கள், துறைசார்ந்த அதிகாரிகள்,அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள்,பொது மக்களின் பிரதிநிதிகள்,கூட்டுறவாளர்கள் ,பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(ச–5)

## உதைபந்தாட்டம்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதிஅணியும்,மற்றுமொரு போட்டியில் பிற்பகல் 4.30 மணிக்கு ஊரெழு றோயல் அணியை எதிர்த்து சக்கோட்டை சென் சேவியர் அணியும் மோதவுள்ளன. (ச–3,24)

# இலங்கைக் கடற்பகுதியில் மூழ்கடிக்கப்பட்ட எந்தவொரு கப்பலும் மீட்டெடுக்கப்படாது

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

இலங்கைக் கடல் பகுதியில் மூழ்கியுள்ள எந்தவொரு கப்பலையும் மேலே கொண்டுவருவதற்கு இடமளிக்க முடியாதென கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல்கள் மூழ்கியுள்ள கடற் பகுதி பிரதேசமானது மீன்கள் பெருக்கம் காணப்படும் வலயமாகும் என கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

கப்பல்களின் சிதைவுகள் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் மீன்கள் முட்டையிட்டுப் பெருகுவதற்கான சூழ்நிலை அதிகம் காணப்படுவதாக நாரா நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.அதற்கிணங்க இந்தக் கப்பல்களை மீண்டும் வெளியில் கொண்டு வருவதால் நாட்டின் மீன்பிடித் தொழிலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படக்கூடும் என அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

இதே வேளை கரையோரங்களில் மூழ்கிக் கிடக்கும் 76 கப்பல்களை மீண்டும் வெளியில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் சாந்த வீரக்கோன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார். (ஸ்ரீ–2)

# சீடத்துவத்தின் விலை என்ன?

இவ்வுலகில் மனிதனின் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விலை உண்டு. அந்த விலை அவனவன் செயலின் தன்மைக்கு ஏற்ப உயர்ந்தோ அல்லது குறைந்தோ காணப்படும்.


ஆம், இன்று மனிதன் கலியுகக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். எனவே எதைச் செய்தாலும் கணக்குப் பார்த்தே செய்கின்றான். இந்த வேலையைச் செய்தால் எவ்வளவு கிடைக்கும்? இந்தப் பொருளை வாங்கினால் என்ன இலாபம் கிடைக்கும்? இந்த மனிதரிடம் பழகினால் என்ன உயர்வு கிடைக்கும் என்று எதற்கெடுத்தாலும் கணக்குப் போட்டுக் கொண்டே வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றான்.

ஆனால் பொருட்களுக்கும் செயல்களுக்கும் விலை போடலாம், ஆனால் மனித குணத்திற்கு, பண்பிற்கு விலைபோட முடியுமா? அன்புக்கு என்ன விலை? அதிலும் தாயன்புக்கு என்ன விலை? இரக்கத்திற்கு என்ன விலை? நட்பிற்கு என்ன விலை?

ஆம், இவைகளுக்கெல்லாம் விலையே இல்லை. இவைகளை எல்லாம் ஒரு மனிதன் விலை கொடுத்து வாங்க முடியாது, மாறாக, நல்ல சிந்தனையிலிருந்து, நல்ல சொல்லிலிருந்து, நல்ல செயல்களிலிருந்து தான் பெற முடியும்.

ஆம், இன்றைய நற்செய்தியும் இதே கேள்வியைத் தான் முன்வைக்கிறது. சீடத்துவத்திற்கு விலை என்ன? இயேசுவின் சீடனாய் இருப்பது அவ்வளவு எளிதல்ல. எனவே உண்மையான சீடத்துவத்தின் விலை சிலுவை. இதை இன்றைய நற்செய்தியின் முதல் பகுதியில் இயேசுவே கூறுகின்றார்.

பலனை எதிர்ப்பார்த்தல்ல சீடத்துவ வாழ்வு, பணிவிடைசெய்வதேஆகும்.வாழ்வைப் பெறுவதல்ல சீடத்துவ வாழ்வு, வாழ்வை அளிப்பதே உண்மையான சீடத்துவ வாழ்வு. இதை இயேசுவே கூறுகின்றார்.



இரண்டாவதாக சீடத்துவ வாழ்வு என்பது கட்டாயத் திணிப்பு அல்ல மாறாக அது ஒரு மனிதனின் சொந்த விருப்பமாக இருக்க வேண்டும்.

இயேசுவின்சீடனாய்இருப்பது என்பது தாமே விரும்பி வர வேண்டும். இது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட சுதந்திரம். யாரும் அவர்களை கட்டாயப்படுத்தவோ தடை செய்யவோ முடியாது. சொந்தங்களோ, பந்தங்களோ ஒருவரின் சீடத்துவ வாழ்வுக்கு தடையாக இருக்கக்கூடாது.


அதே வேளையில் ஒருவன் இயேசுவைப் பின் செல்ல விரும்பினால் அவன் தன்னிச்சையாக அல்ல ஆவியின் துணை கொண்டே தீர்மானிக்கவேண்டும். ஆவி தரும் திருமுழுக்கினால் தான் ஒருவர் இயேசுசைப் பின்செல்ல தீர்மானிக்க முடியும். இதைத்தான் இன்றைய முதல் வாசகம் தெளிவுபடுத்துகிறது.

### பரமபிதா காட்டிய பாதை

ஆம், துன்பங்களினால் தான் சிலுவைக்குப் பெருமை, சிலுவையினால் தான் துன்பங்களுக்குப் பொருள். இந்த சிலுவை தான் உண்மையான சீடத்துவத்திற்கான விலை. இந்த விலையை ஏற்றுக்கொள்வோமா? இயேசுவை பின் செல்வோமா?

*ஜோன் ஹெரபேர்ட்*

# பாகிஸ்தானில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகளால் 79 பேர் பலி



பாகிஸ்தானின் குவெட்டா நகரில், ஷியா பிரிவு முஸ்லிம்கள் நடத்திய ஊர்வலத்தில் தற்கொலைப்படையினர் தாக்குதல் நடத்தியதில் 42 பேர் பலியாயினர்; நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தனர். ஏற்கனவே வெள்ளப் பாதிப்பில் நிவாரணங்களை முழுவீச்சில் செய்யமுடியாமல் தவிக்கும் பாகிஸ்தான் அரசு அடுத்தடுத்த குண்டு வெடிப்பில் அதிர்ந்து இருக்கிறது. அதே சமயம் பாகிஸ்தான் பொருளாதாரம் அதல பாதாளத்துக்கு கீழிறங்கி வருகிறது.

பாகிஸ்தானில் ஷியா,சன்னி முஸ்லிம்களுக்கிடையேயான மோதல் அடிக்கடி நடக்கிறது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன், பெஷாவர் மற்றும் கராச்சி நகரில் ஷியா முஸ்லிம்கள் நடத்திய ஊர்வலத்தில் வன்முறை மூண்டது. பெஷாவரில் தற்கொலைப் படையைச் சேர்ந்த மூன்று பேர் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தி யதில் 37 பேர் பலியாயினர்.

இந்தச்சம்பவத்தின் சலசலப்பு மறைவதற்குள் நேற்று முன்தினம் குவெட்டா நகரில் ஷியா முஸ்லிம்கள் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக நடத்திய ஊர்வலத்தில் சன்னி பிரிவைச் சேர்ந்த தற்கொலை படைப் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில் 42 பேர் பலியாயினர். நூற்றுக்கும் அதிக மானவர்கள் படுகாயமடைந்தனர். கடந்த ஆண்டு சன்னிப் பிரிவு தலைவர்கள் சிலர் கொல்லப் பட்டதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தலிபான்கள் தெரி வித்துள்ளனர்.

பெஷாவர் பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு இடங்களில் குண்டு வெடித்ததில் ஒரு பொலிஸ்காரர் உட்பட இருவர் பலியாயினர். பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் பெஷாவர் அருகே மர்தான் என்ற இடத்தில் அகமதி பிரிவினரின் மசூதியை தகர்க்கும் நோக்கோடு தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒரு நபர் தன் இடுப்பில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தான். மசூதிக்குள் நுழைய விடாமல் பாதுகாவலர்கள் தடுத்து விட்டதால் தற்கொலைப் படையைச் சேர்ந்தவன் உடல் சிதறிப் பலியானான். இந்த சம்பவத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.பாகிஸ்தானில் உள்ள அகமதி பிரிவினர் மசூதிகளில் தொழுகை நடத்துகின்றனர்.

ஆனால்,இவர்களைப்பாகிஸ்தான்அரசுமுஸ்லிம்களாக இன்னும் அங்கீகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பெஷாவரின் புறநகர்ப்பகுதியில் வீதியில் சென்றுகொண் டிருந்த பொலிஸ் ரோந்து வாகனத்தை பயங்கரவாதிகள் ரிமோட் கன்ட்ரோல் குண்டு மூலம் வெடிக்கச் செய்தனர். இதில் ஒரு பொலிஸ்காரர் பலியானதுடன் மூன்று பேர் படுகாயமடைந்தனர். (ஸ்ரீ-2)

# ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்தது ஜப்பான்


(டோக்கியோ)

அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஈரான் மீது ஐ.நா பாதுகாப்பு சபை ஐரோப்பிய யூனியன் , அமெரிக்கா ஆகியவை ஏற்கனவே பொருளாதாரத் தடை விதித்துள்ளன. இந்நிலையில் ஜப்பான் நேற்று முன்தினம் பொருளாதார தடை விதித்தது.

ஈரானின் அணு ஆயுதத் திட்டங்களுக்கு உதவி புரிந்து வரும் 15 ஈரானிய வங்கிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் எரிசக்தி துறையில் முதலீட்டுக்கும் தடை விதித்துள்ளது. ஆனால், எண்ணெய் இறக்குமதிக்குத் தடை விதிக்கவில்லை. (ஸ்ரீ-2)

# நியூசிலாந்தில் பயங்கர நில நடுக்கம்; மக்கள் பீதியில் ஓட்டம்

(கிறிஸ்ட்சர்ச்)



நியூசிலாந்தின் கிழக்கு கடற்கரையில் தெற்குப் பகுதியில் கிறிஸ்ட்சர்ச் நகரம் உள்ளது. தீவு பகுதியான இது நியூசிலாந்தின் 2 ஆவது பெரிய நகரமாகும். இங்கு 3 இலட்சத்து 42 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இதன் அருகே சுமார் 7 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று முன்தினம் நள்ளிரவு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டதனால் வீடுகள் அதிரடியாக குலுங்கின.

எனவே தூங்கிக் கொண்டிருந்த மக்கள் பயத்தில் எழுந்து, நில நடுக்கம் ஏற்பட்டதை அறிந்து அவர்கள் அலறியடித்தபடி வீட்டை விட்டு வெளியேறி வீதியில் ஓட்டம் பிடித்தனர்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி ஏற்படும் என்ற அச்சத்தில் வீடுகளில் இருந்த அனைவரும் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றதுடன் நள்ளிரவில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

நிலநடுக்கம் 7.4 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அமெரிக்கப் புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. எனவே பல வீடுகள், கட்டடங்கள் இடிந்தன. இடிபாடுகளில் சிக்கி பலர் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஆனால், இதுவரை இது பற்றிய தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. இதற்கிடையே காயம் அடைந்தவர்கள் சிகிச்சை பெற வசதியாக கிறிஸ்ட்கர்ச் நகரில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளும் திறந்து வைக்கப்பட்டு தயார் நிலையில் இருந்தன.

கிறிஸ்ட்சர்ச் அருகே பூமிக்கு அடியில் 66 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. (ஸ்ரீ-2)

# கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இணையும் 15 வயது மாணவர்

(லண்டன்)

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 237 ஆண்டுகளுக்குப் பின்னர் பாடசாலைக்கே செல்லாத 15 வயதாகும் ஆரன் பெர்னாண்டஸ் கணித பட்டப்படிப்பில் சேருகிறார்.

1773 இல் 14 வயதான வில்லியம் பிட் என்பவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த இளம் வயது மாணவர் என்ற பெருமையைப் பெற்றார். அவரைத் தொடர்ந்து 237 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரன் பெர்னாண்டஸ் அந்த கௌரவத்தைப் பெற்றுள்ளார்.

பிட்ஸ்வில்லியம் கல்லூரியில் அடுத்த மாதம் சேரவிருக்கும் அவர் உலகின் மிகக் கடினமான கணிதப் பாடத்திட்டம் என்று கருதப்படும் திரிபோஸ் பட்டப்படிப்பை தேர்ந்தெடுத்துள்ளார்.

சேர் ஐசக் நியூட்டன், ஸ்டீபன் ஹாகிங் உள்ளிட்ட பிரபலங்கள் பயின்ற அந்தப் பாடத் திட்டம் கணித உலகில் புரியாத புதிர் என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பாடத் திட்டம் மிகவும் எளிமையாக இருப்பதாக ஆரன் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

முதலாண்டு பாடங்கள் அனைத்தையும் படித்து விட்டதாகவும் அவை மிக எளிதாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் தந்தை நீலிடம் கல்வி பயின்று வரும் அவர் 5 வயதிலேயே ஜிசிஎஸ் எனப்படும் மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று விட்டார். இந்தத் தேர்வு 14 முதல் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கானது.

ஆரனின் அறிவுத்திறனைப் பார்த்து வியந்து 14 வயதிலேயே அவருக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இடம் அளிக்கப் பட்டு விட்டது. இப்போது பல்வேறு ஆய்வுகளுக்குப் பின்னர் கணிதப் பட்டப்படிப்பில் அவர் சேர்க்கப்படுகிறார்.

கணிதம் மட்டுமன்றி பறவைகள் ஆராய்ச்சி, ஆங்கில இலக்கியம் ஆகியவற்றிலும் ஆரனுக்கு அதிக ஆர்வம். விடுமுறையில் பறவைகள் ஆராய்ச்சி குழுவில் ஐக்கியமாகி விடுவார். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் குறித்து ஆய்வுப் புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளார். (ஸ்ரீ-2)

# எறும்பைக்கண்டு அஞ்சுமாம் யானை!

(லண்டன்)

எலியைக் கண்டு அஞ்சுமாம் யானை என்பது கர்ணபரம்பரை கட்டுக்கதை. எலியை விட உருவத்தில் மிகச்சிறிய எறும்பை கண்டுதான் அது பயப்படுகிறது என்கிறது சர்வதேச விஞ்ஞானிகள் குழு ஒன்று.

அட அது உண்மையா என்றால் உண்மைதான் என்கிறது டெய்லி மெயில் என்ற பத்திரிகையில் வெளியான செய்தி.

புளோரிடா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர்டோட் பால்மர் என்பவர் தலைமையில் இயங்கும் விஞ்ஞானிகள் குழு கென்யாவில் ஓர் ஆய்வு நடத்தியது. ஒரு வகை மரத்தின் கிளைகளை யானை மேய்ந்துவிடாது கட்டெறும்புகள் தடுக்கின்றன என்று இந்த விஞ்ஞானிகள் குழு கண்டறிந்துள்ளது.

வனவிலங்குகளில் உடலால் பெரியது யானை. அதனுடன் பலத்தால் பருத்த உடலால் ஒப்பிடவே முடியாதது கட்டெறும்பு. அப்படியிருக்க எறும்புக்கு யானை பயப்படும் இரகசியம் என்ன? அதுதான் குழு ஒற்றுமை அது எப்படி?

யானை மரக்கிளையை ஒடிக்க முயன்றால் அந்த மரத்திலிருக்கும் கட்டெறும்புகள் வரிசையாக யானையின் துதிக்கைக்குள் புகுந்து தங்கள் வேலையைக் காட்டிவிடுகின்றன. துதிக்கைக்குள் நரகவேதனையைச் சந்திக்கும் யானைகள் அதன்பின் அந்த மரத்தின் பக்கம் திரும்பி கூட பார்க்காமல் சென்று விடுகின்றன. அப்புறம் என்ன? உருவில் சிறிது வலுவில் பெரிது என கதை மாறிவிடுகிறது.

சிறிய உருவம் கொண்டவை எப்படி உலகை ஆள்கின்றன என்பதற்கு இது மற்றொரு உதாரணம். பிராணிகளின் வாழ்வியலை பற்றி ஆய்வு நடத்தும் இந்த விஞ்ஞானிகள் குழு இந்த அரிய உண்மையை கண்டறிந்துள்ளது. குழு ஒற்றுமை ஒன்றுதான் இந்த கட்டெறும்புகளுக்கு பலம். யானை உருவத்தில் பெரியதாக இருந்தாலும் தனிமையில் தான் இந்த எறும்புக்கூட்டத்தின் சவாலை எதிர்கொள்ளவேண்டியிருக்கிறது. துதிக்கைக்குள் படையெடுக்கும் கட்டெறும்புக் கூட்டத்தின் முன் தனியொரு யானையால் என்ன செய்ய முடியும். ஒன்றும் செய்ய முடியாது தானே! (ஸ்ரீ-2)




# அவுஸ்திரேலியாவில் ஆட்சி அமைப்பதில் இழுபறி நீடிப்பு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் முக்கியமான இரு கூட்டணிக்கும் பெரும்பாண்மை கிடைக்கவில்லை.

150 பேர் கொண்ட பாராளுமன் றத்தில் பிரதமர் ஜூலியா கில்லர்ட் தலைமை யிலான லேபர் கட்சிக்கு 74 உறுப்பினர் களின் ஆதரவும் டோனி அப்போட் தலைமையிலான லிபரல் கட்சி கூட்டணிக்கு 73 உறுப்பினர்களின் ஆதரவும் உள்ளது.

3 சுயேட்சை உறுப்பினர்கள் எந்த கூட்டணியை ஆதரிப்பது என்று இன்னும் முடிவு செய்யவில்லை. அவர்களுடன் இரு கூட்டணிகளும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. அவர்களின் ஆதரவைப் பெறுபவரே ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை நிலவுகிறது. (ஸ்ரீ-2)

# நடுவர்களின் தவறுக்கு தீர்வு என்ன?




கிரிக்கெட் போட்டிகளைப் பொறுத்தவரை நடுவர்கள் அளிக்கும் தீர்ப்புத்தான் இறுதியானது. கிரிக்கெட் ஆரம்பித்த காலம் முதல் இது தான் நடைமுறையில் இருந்துவருகிறது. ஆனால் நடுவர்கள் அளிக்கும் தீர்ப்பு 100 சதவீதம் சரியாக அமைவது இல்லை. ஒரு சில நேரங்களில் ஆட்டத்தின் போக்கை மாற்றிவிடும். அளவிற்கு விபரீதத்தை ஏற்படுத்திவிடுகிறது.

சமீபத்தில் இலங்கையில் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடந்தது. இதில் இந்தியா, இலங்கை மோதிய ஒருநாள் போட்டியில் இலங்கை நடுவர் தர்மசேனா 3 முறை தவறான தீர்ப்பு அளித்தார். தவிர இப்போட்டியில் மற்றுமொரு நடுவராக செயல்பட்ட பாகிஸ்தானின் அசாத் ராப் ஒரு முறை தவறான தீர்ப்பு அளித்தார்.

இவர்களின் தவறான கணிப்பால் முன்னணி இந்திய வீரர்களான சேவாக், தினேஷ் கார்த்திக், சுரேஷ் ரெய்னா, யுவராஜ் ஆகியோர் ஆட்டமிழந்தனர்.

இதனால் அப்போட்டியில் இந்திய அணி படுதோல்வி அடைய நேரிட்டது. ஐ.சி.சி. விதிகளின் படி நடுவர்கள் அளிக்கும் தீர்ப்புக்கு பெரிய அளவில் எந்தத் தண்டனையும் இல்லை.

**யு.டி.ஆர்.எஸ், முறை.**

தவறான தீர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டியது அவசியம் அப்போதுதான் கிரிக்கெட் மீதான இரசிகர்களின் ஈர்ப்பை நிலைநிறுத்த முடி யும் இதன் முதற்கட்டமாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) கடந்த 2008 ஆம் ஆண்டு நடுவர் தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மறுபரிசீலனை செய்யும் முறையை (யு.டி.ஆர்.எஸ்) அறிமுகம் செய்தது. அவ்வப்போது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பயன்படுத்தப்பட்டு வந்த யு.டி.ஆர்.எஸ். முறைக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐ.சி.சி முழு அங்கீகாரம் அளித்தது.

ஆனால் தற்போதும் பரிசோதனை முறையில் தான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையின்படி துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு செய்யும் அணிகள் தலா மூன்று முறை நடுவர் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேன்முறையீடு செய்து கொள்ளலாம் பின்னர் டிவி நடுவர் மூலம் இறுதித் தீர்ப்பு வழங்கப்படும்.

**ஹாட் ஸ்பாட் முறை.**

இருப்பினும் பந்து துடுப்பில் பட்தா என்பதை யு.டி.ஆர்.எஸ். முறையில் தெளிவாகக் கண்டறிய முடியவில்லை. இந்தத் தொழில்நுட்ப முறைக்கு இந்தியா மற்றும் இங்கிலாந்து கிரிக் கெட் சபைகள் ஆதரவு அளிக்கவில்லை. இதை அடுத்து ஹாட் ஸ்பாட் என்ற புதிய முறையை ஐ.சி.சி அறிமுகப்படுத்தியுள்ளது.

இது மிகவும் துல்லியமான தவறுகளைக் கண்டறிய உதவுகிறது. இதற்கு 2 இன்பிராரெட் கமராக்கள் பயன்படுத்தப்படும். இதிலிருந்து கணினி மூலம் நெகடிவ் இமேஜ் பெறப்படும் இதன் மூலம் பந்து துடுப்பில் பட்டதா அல்லது துடுப்பில் படவில்லையா என்பதை வீடியோ நெகடிவ் மூலம் தெளிவாகக் கண்டறிய முடியும்.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் பெரும்பாலும் இந்த முறையை பயன்படுத்தி வருகின்றன.

**தொழில்நுட்பம் அவசியம்.**

அடுத்த ஆண்டு இந்திய துணைக்கண்டத்தில் உலகக்கிண்ன (50 ஓவர்) கிரிக்கெட் தொடர் நடக்கவுள்ளது முக்கியமான இத் தொடரில் நடுவர்களின் தவறான தீர்ப்பு தொடரக் கூடாது என்பதில் ஐ.சி.சி உறுதியாகவுள்ளது அதனால் யு.டி.ஆர்.எஸ். முறையைப் பயன்படுத்த முடிபு செய்துள்ளது.

ஆனால் இதற்கு பி.சி.சி.ஐ. எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. அதே சமயம் ஹாட் ஸ்பாட் இம் முறைக்கு வரவேற்பு அளித்துள்ளது. இந்திய அணி வீரர் சச்சினும் ஹாட் ஸ்பாட் முறைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

உலகக்கோப்பைத் தொடரின் காலிறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் இந்த முறையைப் பயன்படுத்தப்பட அதிக வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் நடுவர்களின் மோசமான தீர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

# இந்தியாவுடனான மோதல் முக்கியம்
# ஆஸி.அணித்தலைவர் பொன்டிங் கணிப்பு



கிரிக்கெட்டில் இந்தியா- பாகிஸ்தான் எப்படியோ, இதே மாதிரிதான் அவுஸ்திரேலியாவும், இங்கிலாந்தும். அதுவும் அவர்களுக்கிடையே நடைபெறும் ஆஷிஸ் தொடர் பெரும் கௌரவப் பிரச்சினையாகக் கருதப்படுகிறது.

இரு நாடுகளுக்குமிடையே நடைபெறவிருக்கும் ஆஷிஸ் தொடரை இரசிகர்கள், கிரிக்கெட் வல்லுனர்கள் மட்டுமல்ல இரு அணி வீரர்களும் கூட பரபரப்பாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் இந்தியாவுடனான டெஸ்ட் தொடரும் முக்கியம் என்று கூறி ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறார் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கிப் பொன்டிங்.

இந்தியாவில் மொகாலியில் ஒக்டோபர் முதலாம் திகதி ஆரம்பமாகவிருக்கும் டெஸ்டிலும் பெங்களூரில் ஒக்டேபர் 9 ஆம் திகதி ஆரம்பமாகும் டெஸ்டிலும் அவுஸ்திரேலியா விளையாடுகிறது. தொடர்ந்து கொச்சி, விசாகப்பட்டினம், கோவாவில் 3 ஒருநாள் போட்டிகள் நடைபெறுகின்றன.

தற்போது பிரிஸ்பேனுக்கு அருகே ஆஷிஸ் தொடருக்கான பயிற்சி முகாமில் கலந்துகொண்டுள்ள பொன்டிங் நாம் ஆஷிஸ் தொடரிலேயே மூழ்கிப்போய்விடக்கூடாது என்று சக வீரர்களுக்கு எச்சரிக்கை குரல் கொடுக்கிறார்.

இந்தியாவை தோற்கடிப்பது முக்கியம் எதிரணி எதிரணிதான். தற்போது அவர்கள் நம்பர் ஒன்றாகவும் இருக்கிறார்கள் நாம் அவர்களை வைத்துத்தான் நம்மை கணித்துக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார் பொன்டிங்.

உதவி அணித்தலைவர் கிளார்க்கும் அவரது கருத்தை ஆமோதிக்கிறார். எனது அனுபவத்திலிருந்து கூறினால் டெஸ்டில் கவனத்தோடு ஆடுவது முக்கியம் கொஞ்சம். அலட்சியமாக இருந்தாலும் ஆபத்துத்தான் என்கிறார்.

இந்தியா- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே கடந்த காலத்தில் சிற்சில சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. அதை ஒப்புக்கொள்ளும் பொன்டிங் சிலரால் சில பிரச்சினைகள் உருவானது உண்மை. ஆனால் அவற்றை எல்லாம் நாம் மறந்துவிடவேண்டும் என்று பொறுப்பாகக் கூறுகிறார்.

தொடர்ந்து அவர் அம்மாதிரியான பிரச்சினைகள் எழும்போதுதான் எல்லோருக்கும் எதிரணியை தோற்கடிக்க வேண்டும் என்ற வேகம் பிறக்கிறது. கூடுதலான ஊக்கம் உருவாகிறது ஆனால் சொல்லப்போனால் அவையெல்லம் முடிந்த பிரச்சினைகள் என்று கூறுகிறார் ரிக்கி பொன்டிங்.

ஆனால் கிளார்க்குக்கு இந்தியாவைப் பற்றி இனிய நினைவுகளே இருக்கின்றன. 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 6 ஆம் திகதி பெங்களூரில்தான் தனது முதல் டெஸ்ட்டை விளையாடினார் கிளார்க். அவை நல்ல நினைவுகள்.. நான் அங்கு 151 ஓட்டங்கள் அடித்தேன் என்று புன்னகைக்கிறார்.

இந்தியாவில் 30 ஆண்டுகளுக்குப் பின் அவுஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வென்றதில் முக்கிய பங்கு வகித்தார் கிளார்க். பெங்களூரை மிகவும் சத்தமான இடம் என்று கூறுகிறார் அவர். நாங்கள் அங்கே ஓர் ஒருநாள் போட்டியில் விளையாடினோம். ஐந்து மீட்டருக்கு அப்பாலிருந்து பொன்டிங் தனது உயிரை எல்லாம் திரட்டி கத்துகிறார். ஆனால் எனக்கு ஒரு வார்த்தை கூட காதில் விழவில்லை மறுபடியும் புன்னகை காட்டுகிறார் கிளார்க். ஆக ஒரு விறுவிறுப்பான அவுஸ்திரேலியா- இந்தியா தொடரை இரசிகர்கள் எதிர்பார்க்கலாம்.

# இந்திய விமானப் படையில்
# டெண்டுல்கருக்கு கௌரவப் பதவி



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு இந்திய விமானப் படையில் கௌரவ குறூப் கப்டன் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் துறையில் டெண்டுல்கரின் மாபெரும் சாதனைகளை கௌரவிக்கும் முகமாக அவருக்கு இப்பதவி வழங்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவமொன்றில் இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீ மார்ஷல் பி.வி.நாயக் டெண்டுல்கருக்கு இப் பதவியை வழங்கிக் கௌரவித்தார்.

இப்பதவி வழங்கப்பட்டமை குறித்து தான் பெருமையடைவதாகவும் அப் பதவி மூலம் இந்திய விமானப் படைக்கு தான் கடமைப்பட்டுள்ளதாகவும் டெண்டுல்கர் கூறினார். இளைஞர்களின் அபிமானத்தைப் பெற்றுள்ள சச்சின் டெண்டுல்கர் இந்திய விமானப் படையில் பதவி பெற்றுள்ளமை ஏராளமான இளைஞர்கள் இந்திய விமானப் படையில் இணைய வழி வகுக்கும் என எயார் சீ மார்ஷல் பி.வி.நாயக் தெரிவித்துள்ளார்.

இந்திய விமானப் படையில் ஒன்பது தரங்களைக் கொண்ட அதிகாரி மட்டத்திலான வரிசையில் குறூப் கப்டன் பதவி ஐந்தாவது இடத்தைப் பெறுகிறது. நாட்டிற்காக சிறப்பாக பணிபுரிபவர்களை கௌரவப்படுத்தும் வகையில் இந்திய பாதுகாப்புப்படைசார்பில் கௌரவப் பதவிகள் வழங்கப்படுகின்றன. இதற்கு முன் 1944 இல் ஜவகர்ராஜா யஷ்வந் ராவ் (பிளைட் லெப்டினன்ட்) 1974 இல் தொழிலதிபர் ஜே.ஆர். டி.டாடா (ஏர் வைஸ் மார்ஷல்) உள்ளிட்ட 21 பேர்களுக்கு கௌரவ பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

1983 இல் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கபில் தேவுக்கு இந்திய இராணுவப்படைசார்பில் கடந்த 2008 இல் லெப்டினன்ட் கேர்ணல் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன் லீக் சவாலானது - மஹேல



ஏர்டெல் இரண்டாவது சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தத் தொடரில் கலந்துகொள்ளும் 10 அணிகளில் ஒன்றான வயம்ப (இலங்கை) அணியின் துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தனா தொடர் குறித்து அளித்த பேட்டியில் கூறியதாவது,

விளையாட்டைப் பொறுத்தவரையில் இந்த வாரம் முக்கியமில்லாத வாரமாக இருந்தாலும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அது நேரம் வந்தால் எல்லாம் தானாக நடக்கும். சம்பியன் லீக் போட்டிகள் தொடங்கிவிட்டால் எல்லோரும் களத்தில் நடப்பதை கவனிக்க ஆரம்பித்து விடுவார்கள். வெளியில் நடக்கும் விடயங்களில் ஆர்வம் காட்டமாட்டார்கள்.

எங்களது வயம்ப அணியைப் பொறுத்தவரை போட்டிக்குத் தயாராகும் நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தென்னாபிரிக்காவில் உள்ள சூழ்நிலைகளுக்கும் இலங்கை சூழ்நிலைகளுக்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்க முடியாத அளவு உள்ளது.

அந்நிய மண்ணில் உள்ள ஆடுகளத்தைப் போல் உள்நாட்டில் உருவாக்குவது என்பது கடினமான காரியமாகும். சீசனின் தொடக்க காலம் என்பதால் தென்னாபிரிக்க நாடுகளில் காணப்படும் வழக்கமான கடின ஆடுகளங்களை நாம் எதிர்பார்க்க முடியாது. இதனால் எதையும் எப்போதும் எதிர்கொள்ளும் அளவிற்கு தயாராக இருக்கிறோம்.

ஆடுகளம் மெதுவானதாக இருக்கலாம். சில அசைவுகளை ஏற்படுத்துவதாக இருக்கலாம் வழக்கத்தைவிட அதிகம் சுழற்சியை ஏற்படுத்துவதாக இருக்கலாம். டெனிஸ்போல் போன்ற பந்தை எகிற வைக்கலாம். எதையும் நாம் கணிக்க முடியாது.

இதில் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். அதுதவிர விளையாடப்போகும் அணிகளின் பின்னணி குறித்து தகவல்கள் எதுவும் கிடைப்பதாக தெரியவில்லை. இது எங்களது பணியை மேலும் சவாலாக்கியுள்ளது. இது போன்ற சூழ்நிலையில் மேலும் தீவிரமாக பயிற்சியில் கவனம் செலுத்த வேண்டியது உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே தவறிவிட்டதா?

## ௯ பேர் அடங்கிய குழு ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே தவறிவிட்டதா? என்பது குறித்து அந்நாட்டின் ஆய்வாளர்கள் 09 பேர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசிற்கும்– தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் மத்தியஸ்தர் பணியில் 1997 முதல் கடந்தவருடம் ஏப்பிரல் மாதம் வரை நோர்வே ஈடுபட்டது.

ஆனால் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த நோர்வே தவறிவிட்டது என்று ஐரோப்பிய கவுன்சிலின் செயலாளர் நாயகமும்– நோர்வேயின் முன்னாள் பிரதமரும்– நோர்வே தொழில் கட்சி பிரமுகருமானரொர்ப்ஜோர்ன் ஜக்லன் பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.

அவரைப்போலவே சர்வதேச அரசியல் அவதானிகள் பலரும் இவ்வாறான விமர்சனங்களை அடிக்கடி முன்வைத்துக்கொண்டே இருக்கின்றார்கள். இந்நிலையில் உண்மையில் நோர்வே தவறிழைத்துவிட்டதுதானா? என்பதைக் கண்டறிய அந்நாட்டு அரசு விரும்புகிறது.

இந்நிலையில் நோர்வேயின் மூன்று பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்த ஆய்வுப்பணியை தொடங்கியுள்ளார்கள். (ச–5)

# முன்னாள் போராளிகள் 508 பேர் நேற்று பெற்றோரிடம் கையளிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்திருந்த 508 இளைஞர், யுவதிகள் நேற்று அவர்களது பெற்றோரிடம் கையளிக்கப்பட்டார்கள்.

வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் இந்த வைபவம் நடைபெற்றது. புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜித முனி சொய்சா இதில் கலந்துகொண்டு விடுதலை செய்யப்பட்டவர்களை அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தார்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் 246 பேர் அண்மையில் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றியவர்கள் என்பதும் மூன்று மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் மணம் முடித்து வைக்கப்பட்ட 50 தம்பதிகளும் அடங்குவார்கள்.

நேற்று விடுதலை செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளும் அவர்களது பெற்றோரும் இந்த விடுதலை குறித்து மகிழ்ச்சி வெளியிட்டார்கள். இராணுவத்தினரிடம் சரணடைந்த 11 ஆயிரம் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களில் இன்னும் 7500 பேர் வரையில் புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் குற்றச்செயல்கள் புரிந்ததற்கான ஆதாரங்கள் உள்ளவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் ஏனையோர் படிப்படியாக விடுதலை செய்யப்படுவர் என்று வைபவத்தில் கலந்துகொண்ட புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் விஜித முனி சொய்சா தெரிவித்துள்ளார். (ச–3,5)


# மரண அறிவித்தல்

## திருமதி உலகேஸ்வரி அருளானந்தம்



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கலைவாணி மில் வீதி, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி உலகேஸ்வரி அருளானந்தம் 04.09.2010 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை அருளானந்தம் அவர்களின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், ஸ்ரீபத்மராசா (J.P.), ஸ்ரீபத்மினி, ஸ்ரீரவீந்திரராசா (France) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

யோகநிதி, தருமராசா, ஜெயகௌரி (France) ஆகியோரின் அன்பு மாமியாரும், உமாபதி, விஜயலெட்சுமி (Canada), காந்தமலர் (Canada), நடனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்றவர்களான வியாளம்மா, பரமானந்தம், தவானந்தம் மற்றும் புஷ்பலதா, தருமலிங்கம் (Canada), வினாயகரத்தினம் (Canada), சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

தினேஷன், திவ்யன், துவாரகன் (வலம்புரி), பிரவீணா, கீர்த்தனா, லோஜிதா, மயூரன் (France), கோமகன், குகன்யா, பிரணவன் (France), காயத்திரி (France) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், பிரகலாவின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.09.2010 இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
முதலாம் வட்டாரம் மண்டைதீவு.
தற்போதைய முகவரி:
கலைவாணி மில் வீதி, கொக்குவில் கிழக்கு

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(இ)





# கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

வலம்புரிப் பத்திரிகை நிறுவனத்தில் கணனிப் பகுதியில்
பணியாற்றும் ஸ்ரீபத்மராசா துவாரகனின் அப்பம்மா
திருமதி
## உலகேஸ்வரி அருளானந்தம்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகரைப்
பிரார்த்திக்கின்றோம்.

05.09.2010 - வலம்புரி நண்பர்கள்

(க)


# இந்திய-சீனப் போட்டிக்கு களமமைக்கும் இலங்கை

## அரசியல் அவதானிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான ஆதிக்கப் போட்டிக்கு இலங்கையில் களம் அமைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்குக் கிழக்கில் முன்னர் இந்தியா மாத்திரமே அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்தது. சீனா, தென் பகுதிகளில் மாத்திரம் தமது பணிகளை மேற்கொண்டு வந்தது.

எனினும் தற்போது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சீனாவும் தென் பகுதிகளில் இந்தியாவும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் வடக்குக் கிழக்கு அபிவிருத்தியின் நிமிர்த்தம் சுமார் 30 சீனத் தொழிலாளர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே இந்தியாவினால் வன்னி உட்பட வடக்குக் கிழக்கு மக்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படவுள்ள வீடுகளை அமைப்பதற்காக 20 ஆயிரம் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. (ச–5)

## உண்ணா...

கட்சி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளது.

திருத்தங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதங்களில் கலந்துகொள்ள மாட்டார்கள் எனவும் குறிப்பிடப்படுகிறது. (ச–5)

## இலங்கை...

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இறுதி யுத்தம் இடம்பெற்ற வன்னிப் பிரதேசத்திற்கும் அவர் செல்வார் என எதிபார்க்கப்படுகிறது. (ச–5)

## அரசமைப்...

எனத் தெரிவித்த பொலிஸார், மற்றைய நபரின் பெயரை வெளியிட மறுத்து விட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதிவான் கேசவன் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். இது குறித்து விசாரணை செய்த நீதிவான், அவர்களை விடுதலை செய்ததுடன் எதிர்வரும் [illegible] ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார். (ச–5)

## விட்டுக் கொடுப்பை மேற்...

அவர் அங்கு முக்கியமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் சம்பந்தப்படுகின்ற அனைத்துத் தரப்பினர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க ஐ.தே.கட்சி தயாராகவுள்ளது.

நாம் தீர்வை வரவேற்கின்றோம். அதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை அரசு, இந்திய அரசு உட்பட சம்பந்தப்படுகின்ற தரப்பினருக்கும் ஆதரவு வழங்க தயாராகவேயிருக்கின்றோம்.

வட மாகாண சபைத் தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டும் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் 14 பேரும் ஒரு மனதாகத் தீர்மானிக்க வேண்டும்.

அவர்கள் அனைவரதும் பங்குபற்றுதலுடன் இத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுகின்றமைக்கு அனைத்து இன மக்களும் சமத்துவமாக நடத்தப்பட வேண்டும். வட மாகாணத்தில் இயல்பு நிலை மீளக் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கம் வட மாகாணத்துக்கு மிக மிக அவசியம். அகதி முகாம்களின் நிலை திருந்தியுள்ளது. ஏனெனில் அங்கு தங்கியிருந்த அநேகர் வெளியேறி விட்டார்கள்.

ஆனால் அவர்களில் சிலர் முகாம்களுக்குத் திரும்பி வரக் கூடும். ஏனெனில் அடுத்த மாதம் மழை காலம் ஆரம்பமாகின்றது. சில நேரங்களில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து விடுகின்றார்கள்.

தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்ற பிரச்சினை குறித்து ஆற அமர இருந்து இரு தரப்பினரும் பேசி எப்படிக் கடற்பரப்பைக் கண்காணிக்கலாம் என்கிற தீர்மானத்துக்கு வர வேண்டும் என்றார். (ச–5)


# பமிலி சுப்பர் ஸ்ரோட்

## வேலை ஆட்கள் தேவை

- பில் கிளாக் (1 ஆள்)
- விற்பனையாளர்கள் (03 பேர்)

(ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத் தக்கது.

யாழ் வீதி,
சந்தை அருகாமை,மானிப்பாய்.

தொடர்புகளுக்கு 0215100169
0217900388
0773946487

(சி–1007)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.